
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

16 - 30 ஜூலை '89
4-17
விலை ரூ. 1-60

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

## ஈழம்: கருணாநிதியின் சூரத்தனம்!



padippakam

www.padippakam.com

# 'இலங்கையிலிருந்து இந்திய ராணுவத்தை திரும்பப்பெறு!'

என வலியுறுத்தி

# மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

ஜூலை - 20

## விவசாயிகள் விடுதலை முன்னணி

## மக்கள் கலை இலக்கியக் கழகம்

### ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிராக...

பாசிச ராஜீவ் கும்பலின் ஈழ ஆக்கிரமிப்புக்கு எதிராக, திருச்சியில் ஜூன் 24, 26 ஆகிய நாட்களில் காட்டூர், கல்லுக்குழி ஆகிய இடங்களில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இரு கூட்டங்களில் தோழர் முத்து தலைமையில் தஞ்சை கிளை செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். ஈழத்தில் இந்தியப் படைகள் செய்து வரும் அட்டூழியங்களைப் பற்றியும், ஆக்கிரமிப்புப் படைகளை வெளியேற்ற மறுக்கும் ராஜீவின் அடாவடித்தனங்களைப் பற்றியும், பாசிச ராஜீவின் பஞ்சாயத்து ராஜ்ஜியம் மற்றும் கருணாநிதியின் இலவசத் திட்டங்களைத் தோலுரித்தும் இப்பொதுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இரு இடங்களிலும் இரவு 12 மணி வரை நடைபெற்ற இக்கூட்டங்களில் திரளாக பொதுமக்கள் பங்கேற்றதோடு தாராளமாக நிதியுதவியும் அளித்து ஆதரித்தனர். மக்கள் கலை இலக்கியக் கழக மையக் கலைக்குழுவின் புரட்சிகர இசை நிகழ்ச்சி இரு கூட்டங்களுக்கும் முத்தாய்ப்பாக அமைந்தது.

மக்கள் கலை இலக்கயக் கழகம்,
திருச்சி கிளை



### சட்ட பூர்வ பகற்கொள்ளை!

அரசின் இலவச - கவர்ச்சித் திட்டங்களில் ஒன்றான முதியோர், விதவை ஆகியோருக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின் கீழ், உதவி பெறுவதற்கு மனுப் போட்டால் அதற்கு அரசு மருத்துவர் மட்டுமே வயது மற்றும் அங்க அடையாள சான்றிதழ் தர வேண்டும் என்ற விதி உள்ளது. இதை தமது கொள்ளைக்கு கிடைத்த இன்னுமொரு வாய்ப்பாகக் கருதி மன்னார்குடி அரசு மருத்துவமனையின் அரசு மருத்துவர்கள் அப்பாவி மக்களிடம் சான்றிதழ் ஒன்றுக்கு ரூ.10 வீதம் கட்டாய வசூல் நடத்துகின்றனர். இது அரசே விதித்துள்ள கட்டணம் என்றும் ஏய்க்கின்றனர். அப்படியானால் வாங்கிய தொகைக்கு ரசீது கொடுங்கள் என்று கேட்டால், நம்மை முறைத்து விட்டு, காசு வாங்காமல் சான்றிதழ் தருவார்கள். ஆனால் அந்த சான்றிதழ் அரசு முத்திரையற்ற போலிச் சான்றிதழாக இருக்கும்.

இப்படி காசு கொடுத்தால்தான் உண்மையான சான்றிதழ் கிடைக்கும் என்பதை அறிவிக்கப்படாத அரசு விதியாக்கி ஏழை மக்களிடம் அநியாயமாகக் கொள்ளையடிக்கின்றனர். கடந்த ஜூன் 21ந் தேதியன்று அரசு மருத்துவர் இளங்கோவனிடம் ரூ.130 தட்சிணை கொடுத்த பிறகு தான் 13 உண்மைச் சான்றிதழ்களைக் கொடுத்தார். தலைமை மருத்துவ அலுவலர் தர்மராசு 27ந் தேதியன்று 5 உண்மைச் சான்றிதழ்களுக்கு ரூ.50 பறித்துக் கொண்டார். ஒரு நாளைக்கு சில மணி நேரங்களில் அவர்கள் அடித்த கொள்ளையின் கணக்கு இது! மொத்தத்தில் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் உண்மையின் குறைந்தபட்ச விலை: அரசு ஆணைப்படி ரூ.10.00

— விடுதலை விரும்பி



### ஏய்க்க வந்து ஏமாந்து ஓடிய கிராம அதிகாரி

வறட்சி பகுதிகளில் வரி வசூல் செய்யக்கூடாதென அரசு அறிவித்த பின்னரும், பல பகுதிகளில் அதிகாரிகள் கூட்டம் மக்களை ஏய்த்து கட்டாய வசூல் நடத்தி அரசிடம் 'நல்ல பெயர்' வாங்க நாயாய் அலைகின்றது. இப்படித்தான் உசிலை வட்டம் பி.மேட்டுப்பட்டி கிராமத்திற்கு கணக்கு நோட்டு புத்தகங்களை மூட்டைக் கட்டிக் கொண்டு வசூல் வேட்டைக்கு வந்தார் கிராம அதிகாரி (V.A.O). இதையறிந்த விவசாயிகள் விடுதலை முன்னணியின் தோழர்கள் அணிதிரண்டு, மக்களிடம் இதை அம்பலப்படுத்தி, அவரை வந்த வழியே திரும்பிப் போகும்படி எச்சரித்தனர். தனது குட்டு வெளிப்பட்டதும் மூட்டையைக் கட்டிக் கொண்டு அவர் ஓடினார். அவர் இருக்கும் போதே "மக்களை ஏமாற்றி வசூல் செய்யாதே! வசூலித்த பணத்தைத் திருப்பிக் கொடு!" என்று செய்திப் பலகையில் தோழர்கள் எழுதி வைத்தனர். அதிகார வர்க்கத்திடம் கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டிராமல் துணிவுடன் அம்பலப்படுத்தி விரட்டியடித்ததை பகுதிவாழ் விவசாயிகள் வெகுவாக வரவேற்று ஆதரித்தனர்.

விவசாயிகள் விடுதலை முன்னணி
உசிலை வட்டம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

நான்காமாண்டு

17

16 - 30 ஜூலை '89

உள்நாடு
தனி இதழ் : ரூ.1.50
ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா : U S $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# ஆதிவாசி - மலைவாழ் மக்களின் போராட்டங்கள் பரவுகின்றன

கூர்க்கா, போடோ, ஜார்கந்து மக்களைத் தொடர்ந்து நாட்டின் வடகோடியில் வாழும் லடாக்கியர்களின் போராட்டம் வெடித்துள்ளது. கடந்த வாரம் லேஹ் நகரில் பல குண்டுகள் வெடித்தன. ஊரடங்கு மற்றும் கண்டதும் சுடும் உத்திரவுகளை ஏந்தி ஜம்மு-காஷ்மீர் போலீசும், இராணுவமும் ஆயுதம் தாங்கி ரோந்து சுற்றுகிறார்கள். காஷ்மீர் - திபேத் எல்லையில் புத்த மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட லேஹ், மற்றும் ஷியா முஸ்லீம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கார்கில் ஆகிய இரு இமயமலை மாவட்டங்களை உள்ளடக்கியது லடாக் பிராந்தியம். இந்துக்களான காஷ்மீரி வணிகர்கள் அங்கே குடியேறி தொழில்கள் அனைத்தையும் கைப்பற்றிக் கொண்டு விட்டனர். அவர்களின் ஆதிக்கம் - சுரண்டலில் இருந்து லடாக்கியர்கள் விடுபடுவதற்காக லடாக் பிராந்தியம் முழுவதையும் ஆதிவாசி - மலைவாழ் - பழங்குடி மக்கள் வாழும் தனிச்சிறப்புப் பகுதியாக அறிவிக்க வேண்டும். அதன் வளர்ச்சிக்குத் தனிச்சிறப்பான கவனம் செலுத்த வேண்டும் என்பது தான் லடாக்கியர்களின் கோரிக்கை.

லடாக்கியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்று ஷேக் அப்துல்லா காலத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டும் நிறைவேற்றப்படவில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக அமைதி வழியில் போராடினார்கள். பிறகு தாம் நிறைவேற்றுவதாக மத்திய - மாநில அரசுகள் வாக்குறுதி கொடுத்திருந்தன. ஆனால் எதுவும் செய்யவில்லை. எனவே லடாக்கியர்கள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

லடாக்கியர்கள் தனி மாநிலம், தனிநாடு கோரவில்லை. ஆதிவாசி - மலைவாழ் - பழங்குடி மக்கள் வாழும் தனிச்சிறப்புத் தகுதிதான் கோருகிறார்கள். ஏற்கனவே தனி மாநில அமைப்புகளின் கீழ் வாழும் நாகா, மீஜோ, திரிபுரா, மணிப்புரி மலைவாழ் மக்கள் தனிநாடு கோரி ஆயுதந் தாங்கிப் போராடுகிறார்கள். ஆதிவாசி - மலைவாழ் - பழங்குடி மக்கள் வாழும் தனிச்சிறப்புப் பகுதிகளாக உள்ள மாவட்டங்களில் வாழும் போடோ, மற்றும் ஜார்க்கந்து மக்கள் தனி மாநிலம் கோரிப் போராடுகிறார்கள். தனிமாநிலம் கோரிய கூர்க்கா இனமக்கள் மலைமாவட்டக் கவுன்சில் தகுதி பெற்றுள்ளனர்.

அடுத்தடுத்து போராட்டங்களில் குதிக்கும் ஆதிவாசி - மலைவாழ் - பழங்குடி மக்களின் பிரச்சினைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையாக, பல பொதுத்தன்மைகளைக் கொண்டவையாக உள்ளன. இந்த மக்கள் வாழும் பிராந்தியங்கள் தேயிலை, காபி, மூங்கில் - தேக்கு - ''பிளைவுட்'' போன்ற காட்டுவளங்கள், பெட்ரோலிய எண்ணெய் வளங்கள், இரும்பு - நிலக்கரி - மேக்னசைட் - அலுமினியம் போன்ற இயற்கை, உலோக வளங்கள் மிக்கவை. அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள தரகு அதிகார முதலாளிகள் மற்றும் பன்னாட்டு கம்பெனிகளின் ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகள் இந்த ஆதிவாசி - மலைவாழ் - பழங்குடி மக்களின் மலிவான உழைப்பைப் பயன்படுத்தியே இந்த இயற்கை வளங்களை சூறையாடுகின்றனர்.

வெளியிலிருந்து போகும் வணிகர்கள் பலவழிகளிலும் ஏமாற்றிக் கொள்ளையடிக்கின்றனர். அரசின் பெரும் அணைத்திட்டங்கள், உலோகக் கச்சாப் பொருட்களுக்காகவும், மரக்கூழுக்காகவும் தாராதரமின்றி காடுகளை அழிப்பது ஆகியவற்றால் ஆதிவாசிகள் வளமான பூமியை இழந்து கொத்தடிமைகளாக பட்டினியிலும் வறுமையிலும் தள்ளப்படுகிறார்கள். அவர்களுடைய மொழி, மரபு மற்றும் கலாச்சாரங்களைச் சின்னாபின்னப்படுத்துகிறார்கள். அரசியல்வாதிகள், காண்டிராக்டர்கள், அதிகாரிகள் வளர்ச்சித் திட்டங்களுக்கான தொகை முழுவதையும் விழுங்குவதோடு கொலை, கற்பழிப்பு, சூறையாடல்கள் நடத்தி அடக்கி ஒடுக்குகிறார்கள்.

எனவே, தனிநாடு தனிமாநிலம், அல்லது தனிச்சிறப்புப் பிராந்திய உரிமைகோரி ஆதிவாசி - மலைவாழ - பழங்குடி மக்கள் போராடுகின்றனர். எதிர்க்கட்சியினர் ஆளும் மாநிலங்களில் அவற்றுக்கு எதிரான ஆயுதமாக இந்தப் போராட்டங்களைத் திசை திருப்பிவிடுகிறது. பாசிச ராஜீவ் கும்பல். தாமே ஆளும் மாநிலங்களில் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்கி ஒடுக்குகிறது. அதேபோல காங்கிரசு ஆளும் மாநிலங்களில் அதற்கு எதிரான ஜனநாயகப் போராட்டங்களாக இவற்றை எதிர்க்கட்சிகள் ஏற்கின்றன. தாமே ஆளும் மாநிலங்களில் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்கி ஒடுக்குகின்றன. போலிக் கம்யூனிஸ்டுகளோ, ஆதிவாசி - மலைவாழ்- பழங்குடி மக்கள் போராட்டங்கள் அனைத்தும் கிறித்துவ - சி.ஐ.ஏ. தூண்டுதலால் நடக்கும் ஏகாதிபத்திய சீர்குலைவு - பிளவு நடவடிக்கைகள் எனக் கூறி எதிர்க்கின்றனர். அதே சமயம் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி பலவீனமாயும், பிளவுபட்டும் இருப்பதால், குட்டி முதலாளித்துவத் தலைமையில் சிக்கி சீர்திருத்தப் போராட்டங்களாக இவை குறுகிப் போயுள்ளன.

சில சீர்திருத்த சலுகைகள், அல்லது பயங்கரவாத ஒடுக்குமுறையில் மூலம் தேசிய இன மற்றும் தேசிய - மொழிச் சிறுபான்மையினருடைய போராட்டங்களைக் கட்டுப்படுத்தி விட முடியும் என்று ஆளுவோர் நம்பகின்றனர். தேசிய இனங்களுக்குப் பூரண சுயநிர்ணய உரிமையும், தேசிய - மொழிச்சிறுபான்மையினருக்கு சுயாட்சி அதிகாரமும் அளிக்காத வரை தனிநாடு, தனிமாநிலம், தனித்தகுதிக்கான போராட்டங்கள் ஓயாது. ஒரு புதிய ஜனநாயகக் கூட்டமைப்பைப் புரட்சியின் மூலம் நிறுவுதற்கான பாட்டாளிவர்க்க இயக்கத்தின் கீழ் இணைவதன் மூலம் மட்டுமே இந்த ஆதிவாசி - மலைவாழ் - பழங்குடி மக்களின் கோரிக்கைகள் நிறைவேறும்.

படிப்பகம்

www.padippakam.com


1954 ஆம் ஆண்டிலிருந்து சணல் ஆலை நூற்பு பிரிவில் பணி புரிந்தவர். தாய், தந்தை, மனைவி, குழந்தைகள் என மொத்தம் 14 பேரை தம் வருமானத்தில் காப்பாற்றி வந்தார். ஆலை இழுத்து மூடப்பட்ட பிறகு நடைபாதையில் குடியேறி சாப்பாட்டுக்கடை நடத்தி பிழைக்கிறது இக்குடும்பம். ஏழ்மையான தங்கள் நிலையிலும், தங்களைப் போன்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் குடும்பங்களின் குழந்தைகளுக்கு 'எஞ்சிய' உணவுகளை கொடுத்து பரிவுகாட்டி உதவுகிறது இக்குடும்பம்.

மதன்லால் வர்மா. கிடங்கு பொறுப்பாளராக வேலை பார்த்தவர். 19, 13, 12 மற்றும் 10 வயதுடைய நான்கு பெண் குழந்தைகளுக்கு தகப்பனார். வயதான, தாய், தந்தையரையும் காப்பாற்றியவர். வேலையிழந்த பிறகு, நாளொன்றுக்கு ஒருவேளை உணவை வழக்கமாக்கிக் கொண்டு தற்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது இக்குடும்பம். 12 'ரெடிமேட்' சட்டைகளுக்கு பட்டன் தைத்தால் கூலி 75 காசு என்று வேலைசெய்து இப்போது குடும்பத்தை 'காப்பாற்றிக்' கொண்டிருக்கிறார், மதன்லால் வர்மா.

இவ்வாறான எத்தனையோ குடும்பங்களில், தங்கள் பெற்றோர்கள் படும் துன்பத்தை காண சகிக்காத இளம் பெண்கள் தங்கள் சுமையாவது அவர்களுக்கு குறையட்டும் என்று தூக்குமாட்டிக் கொண்டு தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ குடும்பங்களில், இளம் பெண்கள் நன்றாக வாழ்ந்த தங்கள் குடும்பம் இப்படி திடீரென நடுத்தெருவில் வந்துவிட்டதை ஜீரணிக்க முடியாமல் தற்கொலை செய்துக் கொள்கின்றனர். இப்படி கண்ணெதிரே நடக்கும் கொடுமைகளைக் கண்டு மனம் நடுங்கும் குடும்ப உறுப்பினர்கள், வேலையற்று தவிக்கும் தங்களது ரத்த வழி உறவினர் குடும்பங்களை தங்களோடு அரவணைத்துக் கொள்கின்றனர். குறைந்த பட்சம் அவர்கள் தங்குவதற்கு இடம் கொடுத்து அவர்களைத் தேற்றுகின்றனர். ஆயிரக்கணக்கான குடும்பங்களின் பெற்றோர்கள், எப்படியோ குழந்தைகளுக்கு ஒருவேளை பொங்கிப் போட்டுவிட்டு தங்களுக்கு உணவு இல்லாமல் பட்டினியால் சுருண்டு கிடக்கின்றனர்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டபூர்வமான குறைந்தபட்ச கூலிக்கும் குறைவாக தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிப் பிழியவும், வேலைப் பளுவை மூர்க்கமாக அதிகரிக்கவும் ஆலை மூடலை மிரட்டும் ஆயுதமாக பயன்படுத்துகிறது, பணம் கொழுத்த கூட்டம். அரசின் எந்த ஒரு எதிர்ப்புமின்றி சணல் ஆலைத் தொழிலில் பெருகி வந்த இந்த ஆலைமூடல் இப்போது கேட்பாரற்று அனைத்து பிரிவு தொழிற்சாலைகளுக்கும் கொள்ளை நோய் போன்று பரவிவருகிறது.

'88 ஆம் ஆண்டில் மட்டும் மே.வங்க மாநிலம் முழுவதும் மூடப்பட்ட பல தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப் பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை



# சணல் முதலாளிகளின் தாக்குதல்! சாமரம் வீசும் போலிகள்!

முடியுமானால், இவர்களுக்காக நீங்கள் கண்ணீர் சிந்தாதீர்கள்! தொழிலாளர்களின் நண்பனாக வேடமிட்டு இச்சகோதரர்களின் முதுகில் குத்திய அத்துரோகிகளின் பிரதிநிதிகளிடம் விளக்கம் கேளுங்கள். மார்க்சிய போர்வை அணிந்து கொண்டு பித்தலாட்ட அரசியலை ஏந்தி வரும் இந்த போலிகளின் மேல் வெஞ்சினம் கொள்ளுங்கள். மக்களுக்கான அரசியல் அரங்கிலிருந்து அவர்களை உடனே வெளியேற்றுங்கள்!

ஹெளரா மாவட்டம் - மேற்கு வங்க மாநிலத்தின் வாழ்வுக்கு இதயதுடிப்பாக இயங்கிவரும் ஆலைத் தொழில்கள் நிரம்பி வழியும் பகுதி. குறிப்பாக, இந்தியாவின் சணல் ஆலைகள் மற்றும் சணல் உற்பத்தியின் குவிமையம். தமிழ்நாட்டின் பஞ்சாலைக்கு பெயர்போன கோவை நகரம் போன்று ஹெளரா என்றாலே சணல் ஆலை மையம் என்று பெயர் எடுத்த நகரம். இன்று, சோகமும் துயரமுமாக ததும்பி நிற்கிறது. சணல் ஆலைத் தொழிலில் ஈடுபட்டு தங்கள் வயிற்றைக் கழுவிவந்த அத்தொழிலாளர்கள் இப்போது வெறுமையும் விரக்தியும் பீடித்து சூன்யமே உருவாக காட்சியளிக்கிறார்கள் பல்லாயிரக் கணக்கானோர் மானத்தைவிட்டுக் கையேந்திப் பிழைக்கிறார்கள். நூற்றுக் கணக்கானோர் தற்கொலைப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். லாபவெறி கொண்ட முதலாளிகள் கூலி உயர்வு கேட்டு போராடிய தொழிலாளர்களுக்கு பாடம் கற்பிக்க, ஒட்டுமொத்தமாக 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட சணல் ஆலைகளை முன்னறிவிப்பு இன்றி படிப்படியாக இழுத்து மூடிவிட்டார்கள்.

தொழிலாளர்களின் நலனைக் காக்க அரியணை ஏறிய போலிகளின் ஜோதிபாசு அரசாங்கமோ கைகட்டி வேடிக்கைப் பார்க்கிறது. காரணமான முதலாளிகளை தண்டிக்க மறுக்கிறது. அரசாங்க ஆதரவால் திணவெடுத்த முதலாளிகள், தொழிலாளர்களுக்கு நட்டஈடு கொடுக்காதது மட்டுமல்ல, அவர்கள் கட்டியிருந்த சேமநல நிதி, மருத்துவ ஈட்டுறுதி நிதிகளைக்கூட திருப்பிதர மறுத்து தொழிலாளர்களின் பல கோடி ரூபாய்களை பகிரங்கமாக சூறையாடிவிட்டார்கள். நிர்கதியாய் வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள், ஆலைகளின் குடியிருப்புகளிலிருந்து துரத்தியடிக்கப்பட்டதால், வாழ வழியற்று நடைபாதைகளில் வசித்து வருகிறார்கள். உண்ண உணவு இல்லாமல் உடல் வலுவிழந்து அற்ப நோய்களுக்குக் கூடத் தாக்கு பிடிக்க முடியாமல் திரள்திரளாக மடிந்து வருகிறார்கள். கல்யாணம் முடிக்கும் வயதில் வீட்டில் பெண்களை வைத்துக் கொண்டு காண சகிக்காதவர்கள், பள்ளி செல்லும் வயதில் விட்டேத்தியாக சுற்றிவரும் பிள்ளைகளை நினைத்து மனம் புழுங்கும் பெற்றோர்கள், பிறந்து சில மாதங்களே ஆன பச்சை மண்களுக்குக்கூட வைத்தியம் பார்க்க முடியாமல் கொள்ளை நோய்களுக்கு வாரிக்கொடுத்து விட்டு மனம் வெதும்பி நிற்கும் தம்பதிகள் - இப்படி எண்ணற்ற கொடுமைகளால் வாழ்வை பறிகொடுத்துவிட்டு நம்பிக்கையிழந்து சூன்யத்தில் வாழ்ந்துவரும் மயானமாக மாறி வருகிறது, ஹெளரா நகரம்.

ராம் சந்தர் ஜெய்ஸ்வால். 35 வயது சணல் ஆலைத் தொழிலாளி. சணல் உண்டைகள் தயாரிக்கும் பிரிவில் பல ஆண்டுகளாக வேலை பார்த்தவர். ஆலை மூடப்பட்டதால், பழைய பாட்டில்கள் சுத்தம் செய்யும் ஒரு சிறு நிறுவனத்தில் கூலிக்கு சேர்ந்தார். வாரத்திற்கு 30 ரூபாய் கூட சம்பாதிக்க முடியாத அந்த கூலி வேலையில் தன்னுடைய மனைவியையும் 12 வயது மகளையும் காப்பாற்றினார். அருகில் இருக்கும் தனியார் தர்ம பள்ளியில் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் கட்டணத்தில் 7ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சீட்டா என்ற அச்சிறுமி, இப்போது வீட்டுக்கு வருவோரிடமெல்லாம் கேவி அழுகிறது. "என்னை அப்பா, பள்ளியிலிருந்து நிறுத்தி விட்டார். மாதம் 10 ரூபாய் 'பீஸ்' கட்டமுடியாதாம்" என்று தேம்புகிறது. உண்மைதான். இனி ராம் சந்தரால் மாதம் 10 ரூபாய் கட்டமுடியாது! அவர் வேலை பார்த்த பாட்டில் கழுவும் நிறுவனத்தையும் இப்போது இழுத்து மூடிவிட்டார்கள்.



படிப்பகம்

1,46,604. இதுவரை பாதிக்கப்பட்ட முடப் பட்ட தொழிற்சாலைகள் மற்றும் வெளியேற் றப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை முறையே லேசு ரக பொறியியற் தொழிற்சா லைகள் 60; 4,414. கனரக பொறியியற் தொழிற்சாலைகள் 28; 23,258. சணல் ஆலைகள் 19; 75,350. பருத்தி ஆலைகள் 9; 20,676. தேயிலை தொழிற்சாலைகள் 2; 1362. சென்ற ஆண்டு மே.வங்கத்தில் ஏற் பட்ட மொத்த மனித உழைப்பு இழப்பு நாட் களில் இது 88.2 சதவிகிதம். தொழிலாளர்க ளின் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட தொழிற் தகராறுகளோ, ஆலை மூடல்களோ இல்லையென்ற அளவுக்கு, மே.வங்க அரசு தொழிலாளர்களின் வர்க்க உணர்வை காய டித்து வருகிறது என்பதையே இந்த புள்ளிவி வரங்கள் காட்டுகிறது. இதை அரசின் ஆய்வ றிக்கைகளே வெட்கமில்லாமல் ஒப்புக் கொள்கின்றன.




''கதவடைப்பு, ஆலை மூடல்கள் மூலம், முதலாளிகள் முத்தரப்பு (நிர்வாகம், அரசு, தொழிலாளிகள்) ஒப்பந்தங்களின் மூலம் ஏற்றுக்கொண்ட கூலியையும் குறைக்க தொடர்ந்து முயற்சிக்கிறார்கள். தொழிலாளர்களிடமிருந்து பல ஆண்டு காலமாக பிடித்தம் செய்த சேமநலநிதி, மருத் துவ ஈட்டுறுதி நிதி போன்ற லட்சக் கணக் கான ரூபாய்களை, மூலதனமாக பயன்படுத் திக் கொள்ளும் எதிர்சலுகை கோருகிறார் கள். தொழில் மந்தம், கச்சாப் பொருட்கள் விலையேற்றம், நிர்வாக உபரி செலவுகள் போன்று தமக்கேற்படும் அனைத்து பொரு ளாதார சிக்கல்களையும் அப்படியே தொழி லாளர்களின் தோள் மீது தள்ளிவிடும் தந்திர மாகவே கதவடைப்பு, ஆலை மூடல்களை அரங்கேற்றுகிறார்கள். அதில் வெற்றியும் பெறுகிறார்கள். இன்னும் அரசாங்கத்திடமி ருந்து பல்வேறு நிதிச் சலுகைகள் பெறுவதற் கும், அரசாங்க நிதி நிறுவனங்களிடமிருந்து பெருந்தொகையிலான கடன் பெறுவதற் கும், துருப்பு சீட்டாக பயன்படுத்துகின்றனர் '' என்று வாக்குமூலம் தருகிறது அரசின் ஆய்வறிக்கை. மேலும் அது சொல்கிறது: ''...தொழிலாளர்களின் பணி ஒழுங் கின்மை, உற்பத்தி குறைப்பு ஆகிய காரணங் களால் கதவடைப்பு, ஆலை மூடல் தவிர்க்க முடியாததாகிவிட்டதாக கூறுவதையே நிர் வாகம் வழக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் முத்தரப்பு பேச்சு வார்த்தைகளின் போது இத்தகைய காரணங்கள் உண்மை யல்ல என பலமுறை நிரூபிக்கிப்பட்டுள்ளது '' என்கிறது.

மேலும், '87 ஆம் ஆண்டு டெல்லியில் கூடிய மாநிலங்களின் தொழில்துறை அமைச்சர்களின் கருத்தரங்கில், குற்றம்சாட் டிய போலிகளின் மீது எதிர் குற்றச்சாட்டை அடுக்கி வாயடைக்க வைத்தார், மத்திய மந் திரி. ''கதவடைப்பில் ஈடுபட்டுள்ள மே.வங்க தொழில் நிறுவனங்கள் தொழிலா ளர்களுக்கு செலுத்த வேண்டிய தங்கள் பங்கை தொடர்ந்து செலுத்த மறுப்பதோடு, தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்த தொகைகளைகூட முறைப்படி அரசிடம் வரவு வைக்க மறுக்கின்றன. இவ்வாறு, தொழிலாளர்களிடமிருந்து பிடித்தம் செய் யப்பட்ட சேமநல நிதியாக ரூபாய் 95.04 கோடியும் மருத்துவ ஈட்டுறுதி நிதியாக ரூபாய் 18.54 கோடியும் அரசிடம் செலுத்த வேயில்லை. இன்னும் சட்டபூர்வமான உரி மைகள்கூட தொழிலாளர்களுக்கு பகிரங்கி மாக மறுக்கப்படுகிறது. பணி ஓய்வுக் காலத் திற்குப் பிறகும் அவர்கள் பணி செய்ய நிர் பந்திக்கப்படுகிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கு சேரவேண்டிய பிடித்தங்கள் தரப்படுவது இழுத்தடிக்கப்படுகிறது. இத னால் புதிதாக பணிக்கு ஆட்கள் எடுப்பதை தவிர்ப்பதுடன், தேர்ச்சிப் பெற்ற தொழிலா ளர்களை எந்தவித கூடுதல் சலுகைகள் கொடுக்காமல் திரட்டிக் கொள்கின்றன'' என்று போட்டுடைத்தார்.

இதையே வேறுவிதமான கோணத்திலி ருந்து அணுகி, போலிகளின் தொழிலாளர் துரோகக் கொள்கையை முதலாளிகளுக்குப் பறையடித்து அகமகிழ்ந்து போனார், மே.வங்க ஐ.என்.டி.யு.சி. காங்கிரசு தொழிற் சங்க தலைவர் சுப்ரதோ முகர்ஜி. ''இந்தியா விலேயே மிக அதிகமாக மே.வங்கத்தில் தான் தொழிலாளர் பிரச்சனைகள் இருப்ப தாக, தொழிலதிபதிகளின் மனங்களில் வீணான குழப்பங்கள் உருவாக்கப்படுகி றது. இது ஆதாரமற்றது. உண்மையில், தொழிலாளர் பிரச்சனைகளே இங்கு இல்லை என்பதுதான் சரியானது. ரிசர்வ் வங்கியின் அறிக்கையே இதை உறுதிபடுத்து கிறது. மே.வங்கத்தில், கடந்த 10 ஆண்டுக ளில், தொழிலாளர்களின் வேலை நிறுத்தத் தால் ஏற்பட்ட ஆலை மூடல்கள் வெறும் 2 சதவிகிதம் மட்டுமே. மற்ற அனைத்தும் (முதலாளிகளால் மேற்கொள்ளப்பட்ட) கத வடைப்புகளே ஆகும்'' என்று குறிப்பிட்டுக் காட்டினார். இவை எதற்கும் போலிகள் வாயே திறக்கவில்லை.

தொழிலாளர்களின் நலனுக்கே ஆட்சி யும் கட்சியும் நடத்துவதாக கூறும் போலிகள் அரசாங்கம் துரோகத்தனமாக முதுகில் குத்தி னாலும், போர்க்குணமிக்க தொழிலாளர்கள் தங்கள் வர்க்க கோபத்தை ஒரு போதும் இழக்கவில்லை. ஆலையே இழுத்து மூடப் பட்டாலும் அவமானகரமான ஒப்பந்தங்க ளுக்கு அடிபணிய மறுக்கிறார்கள், வீரமிக்க தொழிலாளர் வர்க்கத்தினர். வெறிகொண்ட முதலாளிகள் வக்கிரமான முறையில் தொழி லாளர் வர்க்கத்தை நிரந்தரமாக பழிவாங் கும் நடவடிக்கைகளில் அடுத்தடுத்து இறங் குகின்றனர்.

கூலி உயர்வு கேட்டுப் போராடும் கூலி ஏழை விவசாயிகளுக்கு பாடம் கற்பிக்க விளைச்சல் நிலங்களை மேய்ச்சல் நிலங்க ளாக மாற்றும் பண்ணைப் பிரபுக்கள் போல் தொழிற்சாலைகளை அடுக்குமாடி ஐந்து நட் சத்திர பல்பொருள் அங்காடிகளாகவும், நவ நாகரீக குடியிருப்புகளாகவும் மாற்றி வாட கைக்கு விடுகின்றனர், முதலாளித்துவ தீசர் கள். மக்களின் வரிப்பணத்தில் தொழிற் சாலை நகரங்களாக நிர்மாணிக்கப்பட்ட, ஹௌரா, பராக்பூர், செரம்பூர், சந்தர் நகர், போன்ற தொழில் நகரங்கள் இன்று மயான அமைதியில் அமிழ்ந்து வருகிறது. கச்சாப் பொருட்களை ஏற்றிக் கொண்டு இங்கும் அங்கும் விரைந்து கொண்டிருந்த ரயில் மற் றும் சாலைப் போக்குவரத்துகள் வெறிச்சோ டிக் கிடக்கின்றன. ஓயாமல் கரும் புகைகளை கக்கிக் கொண்டு அந்நகரங்களின் சுவாச மாக இயங்கிவந்த ஆலை புகைப் போக்கி கள் பட்டமரமாக நிற்கின்றன.

தங்கள் ரத்தத்தாலும், வியர்வையா லும் அந்நகரங்களை மின்னிட வைத்த தொழிலாளர்களும் அவர்களது மனைவி மார்களும் குழந்தைகளும் தற்போது ஒரு வாய் சோற்றுக்கும் வழியின்றி கண்கள் இரு ளடைந்து சூன்யத்தை வெறித்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முதுகி லேறி சவாரி செய்து ஆட்சிக் கட்டிலை பிடித்த மே.வங்கத்தின் சிங்கம் ஜோதிபா சுவோ மேலும் அவர்களின் உதிரத்தை உறிஞ்சிக் குடிக்க பன்னாட்டு நிறுவனங்க ளுக்கு பணிவாக சிவப்பு கம்பளம் விரித்துக் கொண்டிருக்கிறார்.

◇ பச்சையப்பன்



www.padippakam.com
படிப்பகம்

என்.டி.ஆருடன் முக்கு சுப்பாரெட்டி; 'புரட்சி'யின் விலை ஒரு லட்ச ரூபாய்!



# 'பாவமன்னிப்பு' அளிக்கும் பாசிச சன்னியாசி

யாளர்களின் மீதான இருவழி தாக்குதலை மீண்டும் உக்கிரப்படுத்தியுள்ளது. இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) மக்கள் யுத்தக்குழு என்ற புரட்சிகர அமைப்பின் பெருகிவரும் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதாக தனது அரசு பயங்கரவாத காட்டாட்சிக்கு நியாயம் கற்பிக்கிறது.

என்.டி.ஆரின் தெலுங்கு தேசக்கட்சியைச் சார்ந்த அடிலாபாத் மாவட்ட தட்டிசெரலா பஞ்சாயத்து யூனியன் தலைவர் மல்கார் ராவ். இவரை மக்கள் யுத்தக் குழுவின் தளம் தற்காப்பு குழுவினர் கடந்த ஜூன் மாதம் 5ந் தேதி கடத்திச் சென்றனர். டிசம்பர் மாதம், ஹைதராபாத் நகரில் ஆந்திர அரசின் அதிரடி சிறப்பு படையினரால் (S.T.F) கைது செய்யப்பட்ட, தங்கள் அமைப்பின் இரு முன்னோடி தோழர்களான (பகுதி பொறுப்பாளர்கள்) இலய்யா, ராயமல்லு இருவரையும் கோர்ட்டில் ஒப்படைக்க வேண்டும் அல்லது போலீசு அவர்களை படுகொலை செய்திருந்தால் அதை பகிரங்கப்படுத்த வேண்டும்

மற்றும் மோதலில் இறந்து விட்டதாக கூறி, என்.டி.ஆர் அரசு புரட்சியாளர்களை படுகொலை புரிவதை நிறுத்த் வேண்டும். இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக 48 மணி நேரத்தில் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கெடு வைத்தனர். தவறினால், கடத் செய்யப்படுவார் என்று எச்சரித்தனர்.

ஏற்கனவே, ராமச்சந்திரன் கௌடா என்ற கம்மன்பூர் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவரை ஜூன் 5ந் தேதி இதே கோரிக்கைகளுக்காக கடத்திச் சென்று பின்னர் விடுவித்து எச்சரித்தனர், இவ்வமைப்பினர். அவ்வமைப்பின் பலவீனத்தையே இது குறிக்கிறது என்று பிரச்சாரம் செய்த என்.டி. ஆர் அரசு இம்முறை அம்மிரட்டலைக் கண்டு கொள்ளாமல் விட்டது.

இதற்கிடையில் ''ஏழையின் நண்பன்'' மல்கார் ராவை ஒப்படையுங்கள் என்று 5000க்கும் மேற்பட்ட பகுதி மக்கள், தெலுங்கு தேச உள்ளூர் தலைவர்களின் தலைமையில் ஊர்வலம் நடத்தி மக்கள் யுத்தக் குழுவுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

மறுபுறம், மல்கார்ராவின் மனைவி அவரது குழந்தைகள் மற்றும் 33க்கும் மேற்பட்ட தெலுங்கு தேசக்கட்சியின் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், எம்.எல்.ஏ, எம்.பிக்கள் திரண்டுச் சென்று என்.டி.ஆரை சந்தித்தனர். இதில் என்.டி.ஆர் ''நெளிவு சுளிவாக'' நடந்துக் கொள்ளா விட்டால் தாங்கள் கட்சியிலிருந்து விலகிவிடப் போவதாக, என்.டி.ஆரிடம் எச்சரித்தனர். மக்கள் யுத்தக் குழுவினர் கோரும் இரண்டு உறுப்பினர்களை போலீசு கைது செய்யவில்லை எனவும் இதை ஏற்கனவே

விரித்தார் என்.டி.ஆர்.

''கட்சியிலிருந்து விலகிக் கொள்வது உங்கள் விருப்பம்! ஆனால், இதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று நடித்தார். தங்கள் கோரிக்கைக்கு அரசிடமிருந்து பதில் வராமல் போகவே மல்கார் ராவை கொன்று உடலை அவரது கிராமத்துக்கு அருகே போட்டுவிட்டு சென்றனர், மக்கள் யுத்தக் குழுவினர். மல்கார்ராவின் படுகொலைக்கு கண்ணீர் வடிக்க வந்த ஆந்திர மாநிலத்தில் உள்துறை அமைச்சர் மாதவ் ரெட்டி, சபாநாயகர் நாராயண் ராவ், சட்ட அமைச்சர் ஆனந்த ராவ் ஆகியோர் அனைவருக்கும் எதிராக பல்லாயிரக்கணக்கான பகுதி மக்கள் திரண்டெழுந்தனர். ''உள்துறை அமைச்சர் ஒழிக!'' என்று ஆவேசத்துடன் கோஷமிட்டனர். வழி நெடுக எழுந்த இந்த ஆவேசக் குரல்களை ஒடுக்க போலீசு தடியடி நடத்தியது. இவர்களிடமிருந்து தப்பிக்க சிறப்பு அதிரடிப் படையினரை பாதுகாப்புக்கு அழைத்து வந்து துக்கம் விசாரித்து விட்டு திரும்பின பெருந்தலைகள்.

தம் மீதும், கட்சித் தலைமையின் மீதும் அவநம்பிக்கைக் கொண்டுள்ள உள்ளூர் கட்சித் தலைமைகளுடன் இணக்கம் காண புரட்சிகர அமைப்புகளின் மீது வெறிகொண்டு பாய்ந்தார் என்.டி.ஆர். அவதூறு, அடக்கு முறைகளின் மூலம் புரட்சிகர அமைப்புகளை கருவறுக்க முடியாது என்பதை தனது பத்தாண்டு கால ஆட்சி அனுபவத்தின் மூலம் படிப்பினைப் பெற்றிருக்கும் பாசிச என்.டி.ஆர் கொலைவாளை விட தேன்தடவிய தோட்டாக்களின் மீது இம்முறை அதிக நம்பிக்கை வைத்தார்.

''தீவிரவாதிகளின் பிரச்சனைகளுக்கு எதிராக மிக விரைவில் தீர்வு காணப்படும். சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்படும்... இதற்கு அதிகப்பட்ச முக்கியத்துவம் கொடுக்கப்படும்.. (அரசின் மீது) நம்பிக்கை இழந்துள்ள மக்களிடம் அந்நம்பிக்கை மீண்டும் நிலை நாட்டப்படும்'' என்று பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

''தீவிரவாதிகள் சரணடைய 30 நாட்கள் அவகாசம் கொடுக்க ஆந்திர அரசு தீர்மானித்துள்ளது. தங்களுடைய ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, தீவிரவாத பாதையிலிருந்து விலகி பொது வாழ்வில் ஒன்று கலக்க விரும்புவோருக்கு அவர்களின் மறுவாழ்வுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும். அரசும், போலீசும் கடந்த கால குற்றங்களுக்காக அவர்களின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காது'' என்று வலைவிரித்தார்.

சர்வ கட்சி பிரதிநிதிகள், அறிவாளிகள், பத்திரிக்கை ஆசிரியர்கள், மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தைக் கூட்டி இந்நடவடிக்கைகளுக்காக மக்களின் கருத்தையும் தான் அறிவதாக பசப்பினார். 'ஜில்லா பிராஜா ரக்ஷனா சங்கம்' என்ற மாவட்ட மக்கள் பாதுகாப்பு கமிட்டிகளை இந்நபர்கள் மூலம் உருவாக்கினார். அனுபவம் வாய்ந்த இந்த மூத்த குடிமக்கள் கமிட்டி ''அரசியலுக்கு அப்பாற்பட்டு இயங்கும்'' என்று கதை சொன்னார். தீவிரவாதிகளின் வன்முறைகள், கொடூரங்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ய''. செயல்களையும் இவர்கள் அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென உண்மையின் மீது திடீர் காதல் கொண்டு உருகினார். மல்கார் ராவ் கொலைக்கு முன்பே, ரங்கண்ணா என்ற முக்கு சுப்பாரெட்டி, என்.டி.ஆரின் தேன் தடவிய தோட்டாவுக்கு முதல் பலியானார்.

மக்கள் யுத்தக்குழுவின் ஆரம்பகால உறுப்பினரும் அவ்வமைப்பில் 8 ஆண்டுகாலம் மத்தியக் கமிட்டி அங்கத்தினராகவும் பொறுப்பு வகித்த ரங்கண்ணா, ''கட்சியை வழிநடத்தி செல்லும் கொண்டப்பள்ளி சீத்தா ராமையா (அவ்வமைப்பின் செயலர்) வின் பாதையில் நம்பிக்கையிழந்து சரணடைவதாக... அரசுக்கு எதிராக யுத்தம் நடத்துவது தற்கொலைக்கு ஒப்பானது என்பதை தான் உணர்ந்துக் கொண்டதாக'' காரணம் கூறினார்.

இவருடைய மனந்திருந்தலை கெளரவிக்க பாசிச என்.டி.ஆர் இவரை நேரிடையாக அழைத்து பேசினார். இவருடைய தலைக்கு 10,000 ரூபாய் விலை வைத்து தேடிக்கொண்டிருந்த அரசு, அவருடைய மறுவாழ்வுக்காக ஒரு லட்ச ரூபாயை காணிக்கையாகக் கொடுத்தது. என்.டி.ஆரின் தேன் தடவிய தோட்டா எதிர்பார்த்ததைவிட அதிகமான நபர்களை கவ்வி பிடித்தது. முன்னோடிகள், செயல் வீரர்கள், பகுதிப் பொறுப்புகளாக இருந்தவர்கள் என 34 மக்கள் யுத்தக்குழு உறுப்பினர்கள் நான்கு தவணைகளில் என்.டி.ஆர். அரசிடம் சரணடைந்தார்கள். பாசிச என்.டி.ஆர் அரசின் மறுவாழ்வுக்கான நிதிகளை பெருமையோடு வாங்கிக் கொண்டார்கள்.

மேலும், ஊசாலாட்டக்காரர்களை கவர்ந்திழுக்கும் பொருட்டு கொத்து கொத்தாக இலவச திட்டங்களை வீசினார் என்.டி.ஆர். சரணடைபவர்களுக்கு இலவச வீடு, இலவச நிலம், தொழில் துவங்குவதற்கு உடனடியாக கடன் - 24 மணி நேரத்தில் இந்த ஏற்பாடு என்று திட்டங்களை விரைவுபடுத்தினார். புரட்சியாளர்கள் செல்வாக்கு வகிக்கும் கரீம்நகர், வாரங்கல், கம்மம், அடிலாபாத் மற்றும் நிஜாமாபாத் மாவட்டங்களுக்கு இம்மாதிரியான திட்டங்களுக்கு என்று தலா 10 லட்சம் ரூபாய் ஒதுக்கினார். அம்மாவட்டங்களை ஒருங்கிணைந்த பழங்குடிகள் மேம்பாட்டு திட்டங்களின் கீழ் கொண்டு வந்து மேலும் பல 'வளர்ச்சி' திட்டங்களை தீட்டியிருக்கிறார்.

மறுபுறம் புரட்சியாளர்களின் தாக்குதல்களிலிருந்து தங்களை காத்துக்கொள்ள தெலுங்கு தேச கட்சியிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும் உள்ளூர் தலைவர்களை மீண்டும் கட்சிக்கு இழுக்க அதற்காக பல மேல்மட்ட கமிட்டிகளை அமைத்து வருகிறார். கட்சியின் உயர்மட்ட தலைவர்கள், மந்திரிகள் அடங்கிய பட்டாளத்தை, உள்ளூர் தலைவர்களிடம் குசலம் விசாரித்து விட்டு வரும்படி ஊர் ஊராக அனுப்பி வருகிறார்.

உபேந்திரா, சந்திரபாபு நாயுடு, ஆனந்த ராவ், ஜனார்த்தன், வெங்கடசே ராவ் போன்ற முன்னாள், இந்நாள் மந்திரிகள், கட்சி தலைவர்கள், மாவட்ட சிவில் மற்றும் போலீசு உயர்மட்ட அதிகார கும்பலு கூட்டங்கள் நடத்துகின்றனர். புரட்சியாளர்கள் மீது மட்டுமல்ல, தெலுங்கு தேச உள்ளூர் கட்சி தலைவர்கள் மீதே போலீசு கட்டவிழ்த்து விட்ட கொடுமைகள் சரஞ்சரமாக வெளியில் வந்து விழுந்தன.


பயங்கரவாதிகளால் பாதிப்புக்குள்ளான பகுதி சட்டங்களின் கீழ் (TADA) போலீசு அதிகாரிகள் தங்களை எவ்வாறு எல்லாம் கொடுமைப்படுத்தினார்கள் என்பதை கட்சியின் வட்ட, மாவட்ட தலைவர்கள் கூட சோகத்துடன் விவரித்தனர். மாநிலம் தழுவிய அளவில் 49 வட்டாரங்களில், கடப்பா, கர்நூல் போன்ற தீவிரவாதிகளின் வாசனையே இல்லாத மாவட்டங்களில்கூட இச்சட்டத்தை பிரயோகித்தது போலீசுக் கும்பல் ஆட்டம் போடுவதாக மந்திரிகளிடம் குறைபட்டார்கள், உள்ளூர் தலைவர்கள்.

தீவிரவாதிகளின் பீதியை போக்க மக்களிடம் சென்ற இக்கும்பல் போலீசு பீதி தான் மாநிலம் தழுவிய அளவில் மக்களை உலுக்குகிறது என்பதை அறிந்து, முக்காடு போட்டுக் கொண்டு வந்த வழியே திரும்பியது.

இந்த உண்மைகள் அனைத்தையும் மறைத்த ''நடுநிலை'' பத்திரிக்கைகள், தீவிரவாதிகளின் பிடியில் ஆந்திர மாநிலமே மூச்சு திணறுவதாக, என்.டி.ஆர். எதிர்ப்பு கொள்கையையும் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்று சேர்ந்துக் கொண்டு ஒப்பாரி வைத்தன.

''மிருகத்தனமான படுகொலை'' என்று மல்கார்ராவின் படுகொலையை வர்ணித்த இந்த ஏடுகள் அரசு புள்ளி விவரப்படி கடந்த ஆண்டில் மட்டும் ''போலீசு மோதலில்'' 33 புரட்சியாளர்கள் ஆந்திர அரசால் படுகொலை செய்யப்பட்டிருப்பதைப் பற்றி கண்ணை மூடிக்கொண்டன.

சமீபத்திய மாதங்களில் போலீசின் தேடுதல் வேட்டையில் அதிகார பூர்வமாக 1500க்கும் மேற்பட்ட மக்கள் யுத்தக்குழு ஆதரவாளர்கள் நள்ளிரவு கைதுகளுக்கு



ஆந்திர கிராமங்களில் திக்விஜயம் செய்யும் பாசிச என்.டி.ஆரின் சகபாடிகள்; அரசிடம் மக்கள் இழந்த நம்பிக்கையைத் தூக்கி நிறுத்தும் தந்திரம்!

பட்டனர். கையில் கிடைக்காத 12க்கும் மேற்பட்ட அவ்வமைப்பின் உயர்மட்ட தலைவர்களின் தலைகளுக்கு விலை வைத்து தேடிக் கொண்டிருக்கிறது, ஆந்திர அரசு.

அவ்வமைப்பின் தலைமறைவு இயக்க தோழர்கள் மட்டுமல்ல, பல ஆண்டுகளாக மேடைகளில் புரட்சிப் பாடல்கள் முழங்கிய கத்தார், கவிஞர் வரவர ராவ் போன்ற புரட்சிகர கலைஞர்கள்கூட பகிரங்கமாக மேடை ஏற முடியாத அளவு போலீசின் நரவேட்டை தலைவிரித்தாடுகிறது. சென்ற ஆண்டு டில்லியில் நடந்த பிரதிநிதிகள் கூட்டத்திற்கு கலந்துக் கொள்ள சென்ற ஆந்திர மனித உரிமைக் கழக தலைவர் டாக்டர் பாலகோபால், ஆந்திர போலீசால், துப்பாக்கி முனையில் பயண வழியிலேயே கடத்திச் செல்லப்பட்டார். புரட்சியாளர்களின் நினைவுச் சின்னங்கள், கூட நொறுக்கப்பட்டன. மாநாடுகளுக்கு கூடிய, மாணவர்களும் இளைஞர்களும், பெண்களும், பலதரப்பட்ட உழைப்பாளி மக்களும் போலீசால் மிருகத்தனமாக அடித்து விரட்டப்பட்டார்கள். வழியிலேயே கும்பல் கும்பலாக மடக்கப்பட்டு துரத்தியடிக்கப்பட்டார்கள். தற்காப்புக்கென்று தெலுங்கு தேசம் கட்சியினருக்கு மேடைப்போட்டு ஆயுதம் வழங்கிய என்.டி.ஆர் அரசு, புரட்சிகர அமைப்புகள் ஆயுதம் தாங்குவதை கிரிமினல் குற்றம் என்று கூச்சலிடுக்கின்றது. சாதாரணமாக கூட்டம் கூடும் உரிமை, கருத்தைச் சொல்லும் உரிமை, இவற்றைக்கூட வெறி கொண்டு நசுக்குகிறது, என்.டி.ஆர். அரசு. மீறுவோர், பகிரங்கமாக கிரிமினல் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். பல நேரங்களில் போலீசே அவர்களை படுகொலை செய்துவிட்டு ''காணவில்லை''யென அவர்களின் தலைக்கு விலைவைத்து தேடுவது வழக்கமாகி விட்டது.

ரத்தத்தை உறைய வைக்கும் இம்மாதிரியான அரசு பயங்கரவாதத்துக்கு இடையே தான் புரட்சியாளர்கள் மக்களை அரசியல்ப



படிப்பகம்

நாகள். ஏதோ, ஓட்டுக்கட்சிகள் பாணியில் அதன் தலைவர்கள் மாதிரி பகலெல்லாம் குடி, கூத்தி என கும்மாளமடித்துவிட்டு, குளுகுளு அறைகளில் ஓய்வெடுத்துவிட்டு, மாலை நேரங்களில் அலங்கார மேடைக ளில் தோன்றி மறையும் அலங்கார பொம் மைகள் போல அரசியல் பாணி கொண்ட தல்ல புரட்சியாளர்கள் பணி.

அரசு பயங்கரவாதிகளால், அவர்க ளது கைக்கூலிகளால், அவர்களது உயிர்கள் எந்நேரமும் குறிபார்க்கப் படுகின்றன. சிறை, சித்திரவதை, கைது, உயிர்த்தியாகம், பொய் வழக்குகள் - போராட்ட வாழ்க்கை முழுவதும் இப்படி மரணவாயிலில் சிக்கிக் கொண்டுதான் அவர்கள் மக்களின் போராட் டங்களுக்கு உயிருள்ள வரை விசுவாசமாக இருக்கிறார்கள்.

ஒருநாள், இரண்டு நாள் அல்ல தங்கள் வாழ்நாள் முழுவதும் இவ்வாறு ரத்தம் தோய்ந்த பாதையினூடாகத்தான் அவர்கள் தங்களுடைய தலைமறைவு இயக்கத்தை முன்னெடுத்து செல்கிறார்கள். பரவசப் போக்கில் தங்களை இவ்வியக்கத்தில் இணைத்துக் கொண்டவர்கள் - முன்னோடி யாக செயல்பட்டவர்கள், இயக்கத்தில் எழும் தவறுகளை போராட்டத்தினூடே களையும் திராணியின்றி இவ்வியக்கங்க ளின் போராட்ட வாழ்க்கைக்கு முகங்கொடுக்க முடியாமல் [illegible] கொள்வதும் எதிரியிடம் சரணடைவதும் அதிசயம் ஒன்று மில்லை. தற்போது 34 பேர்கள் மட்டுமல்ல, ஆந்திர அரசின் கணக்கின்படியே '88 ஆம் ஆண்டில் 75பேர் இவ்வாறு போலீசிடம் சர ணடைந்து இருக்கிறார்கள். ஆனால், இத னால் எல்லாம் புரட்சிகர இயக்கங்கள் அழிந் துவிடும்; அழித்துவிட முடியும் என கனவு காண்பவன், அவ்வாறு பறையடிப்பவன் ஒரு முட்டாளாக மட்டுமே இருக்க முடியும். பாசிச என்.டி.ஆர் அரசும் எடுபிடி பத்திரிக் கைகளும் அவ்வாறு கூச்சலிடுவதில் நமக்கு வியப்பேதும் இல்லை; ஏனெனில், பாசிஸ்ட் டுகளும் அவர்களது கூட்டாளிகளும் எந்நா ளும் அறிவாளிகளாக இருந்ததில்லை. இது வரலாறு சொல்லும் பாடம்.

அவ்வளவு ஏன்? பழங்குடிகள் தாழ்த் தப்பட்டவர்களின் வாழ்நிலைக்காக கண் ணீர் சிந்தி இப்போது நீண்ட திட்டங்களை தீட்டும் என்.டி.ஆர். அரசு, அவமானம், அடக்குமுறை, சுரண்டல் என அவர்கள் மிரு கத்தனமாக ஒடுக்கப்பட்ட போதெல்லாம், அவைகள் வீணாக இட்டுக்கட்டப்பட்ட கதைகள் என்று கொச்சைப்படுத்தி கேலி பேசியது. அம்மக்களுக்கு தலைமை தாங்கி புரட்சியாளர்கள் முன்னெடுத்த சமரசமற்ற சார்பாக புரட்சியாளர்கள் மேற்கொண்ட பல வேறு பயங்கரவாத நடவடிக்கைகளின் கடு மையால்தான், இப்போது என்.டி.ஆர் அரசு அலறி அடித்துக்கொண்டு கண்ணைத் திறந்து இருக்கிறது. நாளெல்லாம் ரத்தத்தை சிந்தி பீடி இலை சேகரிக்கும் அப்பாவி பழங் குடிகளின் உழைப்புக்கு சில காசுகள் வீசியெ றிந்தது அரசு ஆதரவு பெற்ற கங்காணிகள் கூட்டம். புரட்சியாளர்கள் தலைமையில் அவர்கள் நடத்திய போராட்டங்களும், கூலி உயர்வு கோரிக்கைகளும் அரசால் நக்கல் செய்யப்பட்டது. இறுதியாக கிடங்குகளில் கங்காணிகள் சேமித்து வைத்திருந்த 50 லட்ச ரூபாய்க்கும் அதிகமான பீடி இலை மூட்டை களுக்கு கிடங்குகளோடு புரட்சியாளர்கள் தீ வைத்தார்கள். வாலறுப்பட்ட குரங்குகள் மாதிரி ''நியாயமான'' கூலி உயர்வுக்கு இறங்கி வந்தது அரசும் கங்காணிகள் கூட்ட மும். இம்மாதிரியான பல உதாரணங்களும் அதன் பிறகு புரட்சியாளர்கள் பட்ட சித்திர வதைகளும் ஏராளம்.

புரட்சிகர இயக்கத்துக்குள்ளும் குறை பாடுகள், பலவீனங்கள் இல்லாமல் அடக்கு முறைகளை ஏவியும், ஆசைவார்த்தைகளை வீசியும், சலுகைகளைக் கொடுத்தும் அதன் அணிகளில் கணிசமான பேரை எதிரிகள் இழுத்துவிட முடியாது என்பதும் ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மைதான்! உடனடி யாக அதிகாரத்தைக் கைப்பற்றும் உள்நாட் டுப் போரின் போது தவிர்க்க முடியாததா கிய நிலப்பிரபுக்கள், அரசுப்படை அதிகாரி களை அழித்தொழிப்பது போன்ற நடவடிக் கைகளை முக்கியமான போராட்ட முறை யாக மக்கள் யுத்தக் குழு இப்போதே பின்பற் றுகிறது. அரசு அலுவலகங்களையும், பஸ் - ரெயில்களையும் கொளுத்துவது போன்ற துணிச்சலவாத, பரபரப்பூட்ட மட்டுமே பயன்படும் எதிர் நடவடிக்கைகளை மேற் கொள்ளுகிறது. பகிரங்கமாகப் பறிமுதல் செய்து, பகிரங்கமாக மக்களிடையே விநி யோகிக்கப்பட வேண்டிய எதிரிகளின் சொத்துக்களை இப்போதே சதி வேலைகள் போல இரகசியமாக பறிமுதல் செய்கிறது.

புரட்சிகர இயக்கம் இன்னும் போதிய அளவு தயாராக இல்லாத நிலையில், எதிரி மக்களிடமிருந்து முற்றாகத் தனிமைப்படாத நிலையில், மக்கள் திரள் அனைவரின் ஆதர வைப் பெறாத நிலையில் இத்தகைய நடவ டிக்கைகள் அரசு பயங்கரவாதத்தைக் கட்ட விழ்த்துவிட்டு, ஒடுக்குவதற்கான முகாந்திர மாக அமைகின்றன. 1970 ஆரம்பத்தில் நக் சல்பாரி இயக்கத்தில் தலைதூக்கிய இத்த கைய இடது தீவிரவாதத் தவறுகள் இயக்கத் தைப் பிளவு, பின்னடைவு, தோல்வியில் தள் ளக் காரணமாக அமைந்தன என்கிற பாடத்தை மக்கள் யுத்தக் குழு இன்னமும் கற் றுக்கொள்ளவில்லை. அதன் தொடர்ச்சியா கவே கட்சிக்குள் ஜனநாயக மறுப்பும் தனிந பர் ஆதிக்கமும் கூட நிலவுகிறது.

இந்தக் குறைபாடுகள், பலவீனங்க ளைக் கூட களைந்து கொண்டு புரட்சிகர இயக்கம் முன்னேறுவதை அடக்குமுறை, ஆசை வார்த்தைகள், சலுகைகளால் ஒடுக்கி விட முடியாது என்பதே வரலாற்றுப் படிப்பி னையாகும்.

☐ பாலன்

---

**போ**லிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில் ஆலை மூடலும் ஆட்கு றைப்பும் காரணமாக ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினிச்சாவுக்குத் தள் ளப்பட்டுள்ளனர். அவர்களின் நல்வாழ் வுக்காக ஒரு மண்ணும் செய்ய வக்கற்ற போலிகள், அடக்குமுறை எந்திரமான சிறைச்சாலையைக் கட்டுவதில் முனைப் பாக இறங்கி விட்டனர்.

1987ல் மே.வங்க டம்டம் மத்திய சிறையிலிருந்து நக்சல்பாரி அரசியல் கைதிகள் சிலர் தப்பியோடி விட்டனர். எனவே மே.வங்க சிறைகள் உரிய பாது காப்புடன் இல்லை என்று போலிகள் மத் திய அரசிடம் குறைபட்டுக் கொண்டனர். அதைக் காட்டி புதிய சிறைச்சாலையைக் கட்டியமைக்கும்படி மத்திய அரசு உத்திர விட்டுள்ளது. நாடெங்கும் அதிதீவிர பயங்கரவாதிகள் பெருகி விட்டார்க ளாம்; அவர்களைப் பிடித்து அடைக்க திஹார் சிறை போதவில்லையாம். எனவே ஆளும் பாசிச கும்பல் தனது பங் காளிகளான போலிகளிடம் ஒரு ''மினி'' திஹார் சிறையைக் கட்டும்படி கோரியுள் ளது. இதன்படி, இச்சிறை நவீன பாது காப்பு வசதிகள் கொண்டதாக கட்டிய மைக்கப்படும்; சிறையில் கைதிகளின் அங்க அசைவுகளைக்கூட கண்காணிக்க நவீன காமிராக்கள் பொருத்தப்பட்டு கன்ட்ரோல் அறையிலுள்ள டி.வி மூலம் கண்காணிக்கப்படும். கைதிகள் தப்ப முடி யாதபடி சிறையைச்சுற்றி உயர்மின் அழுத் தம் கொண்ட மின்சார வேலிகள் அமைக் கப்படும் என்று நாட்டிலுள்ள பல்வேறு சிறைகளுக்குச் சென்று மேற்பார்வை யிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தி 'புரட்சிகர' கடமையை நிறை வேற்றிய மகிழ்ச்சியில் மே.வங்க சிறைத் துறை மந்திரி புதிய சிறை கட்டும் திட்டத் தைப் பற்றி அண்மையில் பத்திரிகைக ளுக்குப் பேட்டியளித்துள்ளார்.

இடதுசாரி அரசுகள் மக்கள் நல்வாழ் வுக்கான ஒரு கருவி என்று பிதற்றிய



## ராஜாங்க கம்யூனிஸ்டுகளின் சாதனை?!

போலிகள், கடைசியில் அது அடக்கு முறை எந்திரத்தைப் பலப்படுத்துவதற் கான கருவியே என்பதை நிரூபித்து விட் டார்கள். புரட்சியை பூஜையறையில் வைத்துவிட்டு ராஜாங்க கம்யூனிஸ்டுக ளாக மாறிவிட்ட போலிகளிடம் சாதனை யாக வேறு எதை எதிர்பார்க்க முடியும்?



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# விவசாயிகளின் விடுதலை போராட்டம் துவங்கிய மேற்கு சாம்பரானில் இன்னமும் கொத்தடிமைகள்

"உங்களை கையெடுத்து கும்பிடுகிறோம். எங்களைப்பற்றி எதுவும் எழுதாதீர்கள்!" "... நாங்கள் மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறோம். எங்களுக்கு எந்த குறையும் இல்லை" - சுவாசத்தைக் கூட சுதந்திரமாக விடமுடியாத அடிமைகள் இவர்கள். இருந்தும் "மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறோம்" என்று மனம் ஒப்பிச்சொல்கிறார்கள்.

காரணமில்லாமல் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. அவர்களின் குறைகளைக் கேட்க வந்தவர்கள் எல்லாம், அவர்களின் நிலைமையைப் பார்த்து அனுதாபப்பட்டார்கள். அவர்களின் அவலத்தைக் கேட்டு அதிர்ச்சியுற்றார்கள். தங்களால் முடிந்தளவு அவர்களின் அவல வாழ்வை சோகத்துடன் வெளியுலகுக்கு தெரிவித்தார்கள். இதனால் எல்லாம் அந்த அடிமைகளின் வாழ்வில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக, மேலும் வேதனைதான் அவர்களை வரிசையாக தேடி வந்தது.

எனவேதான், இப்போது சொல்கிறார்கள்: "எங்களுக்கு எந்த குறையும் இல்லை. மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறோம்" என்று! இப்படி சொல்வதுகூட குற்றமா, இல்லையா என்பது அவர்களுக்கு தெரியாது! ஒன்று மட்டும் அவர்களுக்கு தெரியும்! இனிமேலும் அவர்களால் வேதனையை சுமக்க முடியாதென்று. எனவேதான் அவர்கள் சொல்கிறார்கள் "எங்களைப்பற்றி எதுவும் எழுதாதீர்கள்! உங்களை கையெடுத்துக் கும்பிடுகிறோம்" என்று!

பீகார் மாநிலம்; சம்பரான் மாவட்டம் அதைச் சுற்றியுள்ள உள்கிராமங்களில்தான் 10,000க்கும் மேற்பட்ட கொத்தடிமைகள் இருப்பதாக இன்று வெளியுலகுக்கு தெரிந்துள்ளது.

"காந்தி முதல் சத்தியாகிரகம் நடத்திய மண்ணிலா இந்த கொடுமை" என்று கண்ணீர் வடிக்கின்றன கதர் குல்லாய் வாரிசுகள். செத்தவனுக்கு ஒப்பாரி வைத்துவிட்டால் தங்களை யாரும் கொலைகாரர்கள் பட்டியலோடு சேர்த்துவைத்து இனங்காண மாட்டார்கள் என்ற மலிவான சினிமா உத்தியில் சோக வசனம் பேசுகிறார்கள், காந்தீய வாரிசுகள்.

பிரேம்சந்த சேவசர் கெயொன் அப்பகுதியின் மிகப்பிரபலமான கொடும் நிலப்பிரபு. "கான்சாயிகிப்" என்று பெருமையோடு காங்கிரசு கட்சிக்காரர்கள் இவனுக்கு தலைகுனிந்து சேவகம் செய்கிறார்கள்: ரூபாய் 500க்கும் குறைவாக வாங்கிய 36 கூலிஏழை பழங்குடிகளை கொத்தடிமைகளாக வைத்திருக்கிறான் என்று நிருபிக்கப்பட்ட பிறகும், அப்பகுதி வேட்பாளராக எம்.எல்.ஏ பதவிக்கு காங்கிரசுக்கட்சி இவனை சிபாரிசு செய்திருக்கிறது.

நகரங்களில் நடக்கும் காங்கிரசு பேரணிகளுக்கு ஆட்களைத் திரட்டிக்கொண்டு செல்லும் முக்கியமான புள்ளிகளில் இவனும் ஒருவன். இதில்கொடுமை என்னவென்றால் போஜ்பூர் நகரத்தின் அருகாமையில் இருக்கும் பாகா வட்டம் ரிசர்வ் தொகுதியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடிகளின் சார்பாக இங்கு நின்று வெற்றிபெற்ற போலா ராத் மற்றும் திரிலோகிராம் என்ற காங்கிரசு அரிஜன எம்.பியும், எம்.எல்.ஏவும் தான் இங்குள் பண்ணைகளுக்கு சட்டபூர்வ பிரதிநிதிகளாக இயங்குகிறார்கள்.

கோபால்கஞ்ச் என்ற இன்னொரு காங்கிரசு அண்டைத் தொகுதியின் எம்.எல்.ஏ வான பிரிஜ்கிஷோர் நாராயண் சிங் இவர்களது கூட்டாளி. இந்த சதிகார கும்பல் தான் இன்றளவும் கொடும் பண்ணைப்பிரபுகளுக்கு வாளாகவும் கேடயமாகவும் பயன்படுகிறது. சில தனிநபர்களும் சமூக சேவை அமைப்புகளும் இங்குள்ள கொத்தடிமைகள் பற்றி '85 ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்திற்கு தெரிவித்தனர்.

அக்கடிதத்தை மனுவாக ஏற்று விசாரணைக்கு உத்திரவிட்டு தூக்கத்தில் ஆழ்ந்தது உச்சநீதிமன்றம். கொத்தடிமைகளை அன்றைக்கு பிடித்த சனியன் இன்றளவும் விடவில்லை. அதன்பிறகு யார் அவர்களைப் பார்க்கப்போனாலும் "நாங்கள் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறோம்; போய் வாருங்கள்!" என்று பெரிதாக கும்பிடு போட்டு வழியனுப்புகிறார்கள் அந்த ஆதரவற்ற அபலைகள்.

"அந்த" கொத்தடிமைகளை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள், "அதைப்பற்றி"யான அறிக்கையை உடனடியாக சமர்பியுங்கள், "அவர்களி"ன் மறுவாழ்வுக்கான உதவிக்கு வழிசெய்யுங்கள் என்றுதான் உச்சநீதிமன்றம் உத்திரவிட்டதேயன்றி, எந்த கொத்தடிமைகள், யாரிடமிருக்கிறார்கள் என்று குறிப்பிடவில்லை. அந்த வேலையைத்தான் மாநில சிவில் நிர்வாகத்துக்குக் கொடுத்தது, உச்சநீதிமன்றம்.

கொத்தடிமைகளைப் பற்றியான விவரங்கள் சேகரிக்கவும், அவர்களை விடுவிக்கக் கோரியும் பெரும்பாலான சமயங்களில் இப்படித்தான் உத்திரவிடுகிறது, உச்சிநீதிமன்றம். இந்த ஒரு ஓட்டையை வைத்தே கொத்தடிமைகள் மீது இன்றளவும் தங்களது வேட்டையை நடத்துகின்றன மாநில அரசும் பண்ணைப் பிரபுக்கள் கூட்டமும்.

★ அவ்தேஷ் மக்டோ, கஜ்ரியா கிராமத்து கேதுமக்டோவின் மகன் தானே ஒரு கொத்தடிமையாக இருந்ததால், விவரம் சேகரிக்க வந்தவர்களிடம் விரிவாக தங்கள் நிலைமையை எடுத்துச் சொன்னவர். அதன் பிறகும் தொடர்ச்சியாக விபரங்கள் சேகரித்து நீதிமன்றத்திற்கு புகார் அனுப்பியவர்களுக்கு தகவல் கொடுத்து உதவியவர்.

'87 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ந் தேதி மூஜ்ஹாவ்வா கிராமத்து பஞ்சாயத்து தலைவன் ராஜ்குமார் மக்டோ என்பவனின் அடியாளால் நட்டநடு வீதியில் அவர் இரும்பு 'பைப்'பால் அடித்துக் கொல்லப்பட்டார். உயிரையும் பணயம் வைத்து 18 கொத்தடிமைகள் இதைப்பற்றி போலீசுக்கு உடனடியாக புகார் கொடுத்தனர். ஆனால் பி.கே. சிங் என்ற லகாரியா போலீசு நிலைய எஸ்.ஐ ஒருவனை உடன் வைத்துக்கொண்டே பிணத்தை கொளுத்தியது நிலப்பிரபுத்துவ கூட்டம்



சம்பரான் மாவட்டத்து கொத்தடிமைகள். கொடும் பண்ணைப் பிரபுக்களால் வாழ்க்கைப் பறிக்கப்பட்ட அபலைகள்.



படிப்பகம்

* பென்ஹிம் - வயதான விதவை. கொத்தடிமை. பூர்ணவாசி சூர்ஜ்பால் என்ற அவரது ஒரே மகன், ஒரு நாள் தன் பண்ணை வீட்டுக்கு வேலைக்குப் போகவில்லை. மறுநாள், கோவிந்த பிரசாத் என்ற பண்ணை மிருகம், மிருகத்தனமாக தம் மகனை தாக்கியதாக பிறர் சொல்ல கேட்டவர் அதன் பிறகு தம் மகனை பார்க்கவேயில்லை. துணிந்து பண்ணை வீட்டுக்கு சென்று நியாயம் கேட்டிருக்கிறார் அவ்விதவைதாய். அவரையும் கடுமையாக தாக்கி ஏசி விரட்டியிருக்கிறான் அந்த பண்ணை. இப்போது பித்துப்பிடித்து தம் மகனை நினைத்து அழுது கொண்டிருக்கிறார் அந்த விதவைதாய்.

பண்ணைகளின் நேரடி கையாட்களாகவே போலீசும் உயர்மட்ட சிவில் அதிகாரிகளும் கொத்தடிமைகளை வதைப்பதும் மிரட்டுவதும் பகிரங்கமாக நடக்கிறது என்பதை பல் பத்திரிக்கையாளர்கள் ஆதார பூர்வமாகவே நிரூபித்துள்ளனர்.

* ஆர்.கே.சிங். பக்கா மாவட்டத்தின் உதவி கலெக்டர். கொத்தடிமைகளைப் பற்றி ஆராயும் மாநில உயர்மட்டக் கமிட்டியின் அங்கத்தினர். உச்சிநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் அனுப்பும் உத்திரவுகளை நிறைவேற்றவும் நடைமுறைப்படுத்தவும் உள்ள இந்த நபர் கடைசிவரை கொத்தடிமைகளின் வில்லனாகவே செயல்பட்டு மிரட்டி பண்ணைகளிடம் ஒப்படைத்திருக்கிறார். லக்ஷ்பூர் கிராமத்தைச் சேர்ந்த நந்தா மக்டோ என்ற 35 வயது கொத்தடிமை, உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட புகாரில் ஒரு விபரமாக சேர்க்கப்பட்டிருக்கிறார். அதற்கு மறுப்பு புகாரில் கையெழுத்திடும்படி இவரை மிரட்டியிருக்கிறார். ஜெய் மக்டோ, ஏத் மக்டோ. நச்சன் மக்டோ. தாமன் மக்டோ போன்ற அனைவரும் இவரைப் போலவே உறுதியாக இருந்திருக்கின்றனர். இவர்கள் அனைவரையும் "கொள்ளை வழக்கில்" சிறை வைக்க "சிபாரிசு" செய்திருக்கிறான் அந்த அதிகாரி.

* விஸ்வநாத் தெலி.சோன்வர்சா கிராமத்திலிருக்கும் போலீசு. ராமசந்திரசிங் என்ற 650 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் பண்ணைக்கு நேரடியான கையாள். வேலைக்கு போகாத கொத்தடிமைகளை பண்ணை வீட்டுக்கு இழுத்துச் சென்று உதைப்பதும் அவர்களை பலர் முன்னிலையில் கட்டிவைத்து அடிப்பதும் இவன் வேலை.

இப்படி உள்ளூர் போலீசிலிருந்த உயர்மட்ட கலெக்டர் வரை, பஞ்சாயத்து தலைவரிலிருந்து எம்.எல்.ஏ, எம்.பி வரை அந்த அப்பாவி கொத்தடிமைகளைத் தங்கள் கால் செருப்புகளை விடக் கேவலமாக அவமானப்படுத்துகின்றனர். தெருநாய்களை விட கேவலமாக வக்கிரமாக நடத்துகின்றனர். இவையில்லாமல் பண்ணைகளின் பகுதிகளுக்குள் எழுதப்படாத சட்டங்கள் எவ்வளவோ, அமுலிருக்கின்றன. ரூபாய் 500லிருந்து 700 - கொத்தடிமைகளின் ஒரு தலை விலை இவ்வளவுதான். இதற்கு மேல் யாரும் அவர்களை விலை கொடுத்து வாங்குவதில்லை.

தங்கள் தலையை இப்படி அடகுவைத்துதான் தங்கள் மகளின் திருமணத்தை முடிக்கிறார்கள் அந்த கொத்தடிமைகள். உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் தங்கள் குழந்தைக்கு 'டவுனு'க்கு சென்று வைத்தியம் பார்க்கவும் பண்ணைகளிடம் கடன் வாங்கி கொத்தடிமைகளாக உழல்கிறார்கள். ஒரு கூலிக்கு குறைந்தபட்சம் 5 கிலோ நெல்லும் ஒருவேளை சோறும் போட வேண்டும் என்பது சட்டம். "1.5, 2 கிலோ மட்டுமே எங்களுக்கு கூலி (உணவு இல்லை) யாக கொடுக்கப்படுகிறது" என்று சோகத்துடன் கூறுகிறார்கள்.

உடல் நோய் என்று ஒரு நாள் வேலைக்குப் போகவில்லையென்றாலும், அவர்களுடைய மூன்றுநாள்கூலி மறுக்கப்படுகிறது. பண்ணையின் அனுமதியில்லாமல் பக்கத்து சந்தையை வேடிக்கைப் பார்க்க சென்றாலும் அடி, உதை, அவமானமும் பண்ணைகளால் தண்டனையாக அளிக்கப்படுகிறது. வாங்கிய (!) 500 ரூபாயை திருப்பி தந்துவிட்டு இங்கு கொத்தடிமை மீண்டு பேரனதாக வரலாறே இல்லை. பத்தாயிரம் பேரில் பல ஆயிரம் பேர், தங்கள் தாத்தா வாங்கிய கடனுக்காக இன்னும் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். வட்டியைக்கூட இன்னும் அவர்கள் அடைக்கவில்லையாம் - சொல்கிறார்கள் அந்த அப்பாவி கொத்தடிமைகள்.

இதைவிட கொடுமை என்னவென்றால், பல ஆயிரம் கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு விட்டதாக மறுவாழ்வுக்காக ஒரு கொத்தடிமைக்கு 6000 ரூபாய் என அரசிடமிருந்து வாங்கி விழுங்கிருக்கிறார்கள், பண்ணைப்பிரபுக்கள். இதில் அதிகாரிகளும், எம்.எல்.ஏக்களும் கூட பினாமிகள் பெயரில் சுருட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கொத்தடிமைகளை விடுவித்து அதைப்பற்றியான அறிக்கையை நான்கே வாரங்களில் கேட்ட உச்சநீதிமன்றம், ஆண்டுகள் நான்காகியும் ஏன் வரவில்லை என்று எதிர்கேள்வி கேட்கவில்லை. அதற்காக எவர் ஒருவரையும் தண்டிக்கவும் இல்லை. மாறாக, மாநில அரசாங்கம் '87 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் சம்பரான் பகுதியில் ஒரு கொத்தடிமைகள் கூட இல்லையென உச்சநீதிமன்றத்திற்கு அறிக்கை அனுப்பியிருக்கிறது. சில குறிப்பான விபரங்களை சுட்டிக்காட்டிய உச்சநீதிமன்றத்திடம், 'அதைப்பற்றி ஆராய" தனக்கு கால அவகாசம் வேண்டுமென்று இப்போது எதிர் அறிக்கை அனுப்பியிருக்கிறது.

என்ன இருந்தாலும் தமிழ்நாடு எவ்வளவோ மேல்! மாநில மக்களின் உணர்வுகளை புரிந்துக்கொள்ளாத, வேரும் விழுதும் இல்லாத காங்கிரசு பெருச்சாளிகள் ஆளும் மாநிலங்களைவிட தமிழ்நாட்டை ஆளும் கழகங்கள் ஆட்சி இன உணர்வுள்ளது. குறைகள்.இருந்தாலும் இம்மாதிரியான கொடூரங்கள் இங்கில்லை என்று பிரமையில் இருக்கும் அரசியல் பார்வையாளர்கள் இங்கு நிறையவே இருக்கிறார்கள். கழகங்களின் மனிதாபிமான ஆட்சியில் வேரூன்றியிருக்கும் அரசியல் கருத்தல்ல இது. அவர்களின் சினிமா பாணியிலான சவடால் அரசியலால் பரவியிருக்கும் கவர்ச்சிவாதம் இது. இதோ, மறத்தமிழர்களின் வாழ்வு எவ்வாறு எல்லாம் மானபங்கப்படுத்தப் படுகிறது பாருங்கள். அறியாமையில் உழல்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் எவ்வாறு எல்லாம் அவமானப்படுகிறார்கள் என்பதை பாருங்கள். இவர்கள் தமிழ்நாட்டின் கொத்தடிமைகள்.

கோம்பைக்காடு, இடிகோட்டை, ஊத்துப்பாலம், அசையாபாலை, வடக்கரை பாறை - தென் இந்தியாவின் நுழைவாயில் என்றழைக்கப்படும் இடத்தில் வாழும் பள்ளியர் பழங்குடிகள், இவர்கள். காபி, தேயிலை, எலுமிச்சை, ஏலக்காய் எஸ்டேட்டுகளில் கொத்தடிமைகளாக உழலும் அபலைகள். இவர்களின் உழைப்பைக் கொடூரமாக சுரண்டுவது மட்டுமல்ல, அந்த அப்பாவி பழங்குடி சகோதரிகளை நிர்பந்தப்படுத்தி தங்கள் படுக்கைக்கும் பயன்படுத்துகிறார்கள், தமிழ் இன முதலாளிகள். "நாங்கள் அவர்களின் கட்டளைக்குக் கீழ்படியவில்லையென்றால், எங்கள் குழந்தைகளையும், கணவனையும் எங்கள் கண்ணெதிரே சித்திரவதை செய்கிறார்கள்" என்று அவமானத்



தமிழ்நாட்டின் பள்ளியர் பழங்குடிகள். பண்ணைப் பிரபுக்களின் படுக்கைக்கு சுகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படும், கொடுமைகள்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ளுக்கும் வேறு வழியில்லை. அவரும் அம்மாவுடன் முதலாளியின் படுக்கைக்குச் செல்லவேண்டும். அந்த மிருகமே கழித்துகட்டும் வரை, அவர்கள் இந்த அவமானத்தை சுமக்க வேண்டும்.

''ஒத்தையடிபாதை, சாலையோரங்களில் குடிசை கட்டிக்கொள்வதற்கு கூட எங்களுக்கு உரிமையில்லை. எங்களுடைய அவலவாழ்வு வழிப்பயணம் செய்பவர்களுக்கு தெரிந்துவிடும் என்பதால் அதற்கும் எங்களை தண்டிக்கிறார்கள்'' என்கிறார்கள்.

இந்தியாவிற்கு ''சுதந்திரம்'' கிடைத்து விட்டது என்பதுகூட அந்த அப்பாவிகளுக்குத் தெரியவில்லை. இன்னும் நம்மை வெள்ளைக்காரன்தான் ஆண்டுக் கொண்டிருக்கிறான் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நம் நெஞ்சே இறுகிவிடுகிறது; பதைக்கிறது! அவ்வளவு அறியாமையில் அவர்கள் உழல்கிறார்கள். 5 ரூபாய் நோட்டைக் காட்டி ''இது எவ்வளவு'' என்று கேட்டால் ''இது 100 ரூபாயா'' என்று அப்பாவித்தனமாக வாயைப் பிளக்கிறார்கள். சம்ப்ரான் பாணியில் அரசு பயங்கரவாதிகள், இப்போது இவர்களின் கழுத்தையும் நெறிக்க கிளம்பி விட்டார்கள். ஆம்! போலீசும், நீதிமன்றமும், அதிகாரவர்க்கமும் சேர்ந்துகொண்டு இப்போது இவர்களை மிரட்டுகின்றன.

'86 ஆம் ஆண்டில் அங்கு சென்ற ஒரு சமூக சேவை குழு, இவர்களின் நிலைமையை உச்ச நீதிமன்றத்துக்கு தெரிவித்தது. சிவராமன் என்ற ஒரு கருப்பு அங்கிஅணிந்த நாயை, முன்னாள் நீதிபதி என்ற போர்வை போர்த்தி ஒருநபர் விசாரணைக் கமிஷனாக அங்கு அனுப்பி வைத்தது உச்சநீதிமன்றம். திடீர் களசோதனைக்கு அனுப்பப்பட்ட, அந்த கருப்பு அங்கிநாய், தான் வருவதை முன்கூட்டியே எஸ்டேட் முதலாளிகளுக்கு அறிவித்தது. 'ஜாலி'யாக சில நாட்கள் எஸ்டேட் முதலாளிகளின் வீட்டில் தங்கி விட்டு உச்ச நீதிமன்றத்துக்கு ஒரு அறிக்கை சமர்பித்தது அந்த கருப்பு அங்கி.

''கடமென்நரவு கிராமத்தைச் சேர்ந்த பாப்புச்சி மகன் பரமன் என்பவரின் வாக்குமூலத்தை தவிர பிற எவரும் அங்கு கொத்தடிமைகளாக இல்லை. நான் ஆய்வு செய்தவரையில், பள்ளியர் பழங்குடிகளில், நிர்பந்தப்படுத்தி பணிக்கு அழைத்துச் செல்லப்படுபவரோ, கொத்தடிமையோ யாரும் இல்லை.'' - என்று, முதலாளிகளை நக்கிவிட்டுப் போனதற்கு பொருத்தமாகவே ஒரு நற்சான்றிதழ் கொடுத்தது.

உச்சநீதிமன்றமும் தனது நீதித்தராசில் அந்த அறிக்கையை எடை போட்டு பார்த்து விட்டு, அடுத்த மனுவை கையில் எடுத்துக் கொண்டது. தமிழ் நாட்டின் பழங்குடிகள் மேம்பாட்டு துறையோ அதற்கு மேல் ஒரு படிசென்று, மொத்த தமிழகத்திலும் ''ஒரு கொத்தடிமைக்கூட இல்லை'' என்று சாதிக்கிறது. தமிழனை தலை நிமிர வைக்க வந்த இனமான கழகங்களின், ஆட்சியில் தான் இவ்வளவும் நடந்தது; நடக்கிறது.

இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் போது பாசிச ''ராஜீவ்காந்தி, பிரெஞ்சு புரட்சியின் 200வது ஆண்டு விழாவில் கலந்துக் கொள்ள பயணமானார்'' என்ற செய்தியை இந்திய மக்கள் அனைவருக்கும் பெருமையாக சொல்லிக்கொண்டிருந்தது இந்திய அரசு.

பழமை, பிற்போக்கு, அடிமைத்தனம் இவற்றை பிரெஞ்சு மண்ணிலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் தூக்கியெறிந்தது பிரெஞ்சு புரட்சி. அதன் 200வது நூற்றாண்டைதான், இன்று உலகம் முழுவதும் உள்ள பாசிஸ்ட்டுகள் ஒன்று கூடி கொண்டாடுகிறார்கள். அதோ, மானுடத்தின் வீரப்புதல்வர், பிரெஞ்சு புரட்சியாளர்கள் நம்மை அறைகூவி அழைக்கிறார்கள்! அவர்கள் வழியில், நாம் இந்த பிற்போக்கு மகுடங்களின் உயிர்நிலையில் தாக்கி, அடிமை வாழ்வை இம்மண்ணிலிருந்து தூக்கியெறிவோம்!

○ குணசேகரன்.



கைபபற்றப்பட்ட ஆயுதங்கள் — இரகசிய உளவுப்படை ''ரா''-வின் சதிகார நோக்கங்களுக்காக கடத்தி வரப்பட்டவை.

**பா**சிச ராஜீவ் கும்பலின் கண்ணும் காதும் மூளையும் மூக்குமாக இயங்கும் இந்திய உளவுப் படையான ''ரா'' (RAW), பஞ்சாப் பிரச்சினையில் புகுந்து ஏற்கனவே சதி வேலைகளை அரங்கேற்றியுள்ளது. இப்போது இன்னுமொரு சதி அம்பலப்பட்டு மெதுவாக கசிந்து வெளிவந்துள்ளது.

கடந்த ஏப்ரல் 13 அன்று பஞ்சாப் எல்லையில் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட ஐந்து பேரை எல்லைப் பாதுகாப்புப் படையினர் விரட்டிப் பிடித்தனர். விசாரணையின் போது தாங்கள் இந்திய உளவுப்படை 'ரா'வினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட ஆயுதக்கடத்தல்காரர்கள் என்ற உண்மையை அவர்கள் ஒப்புக்கொண்டனர். இந்த ஐவர் கும்பலுக்குத் தலைவனாக இருந்த சலிம்நசி என்பவன் 1988 ஜனவரி முதலாக இதுவரை 12 முறை பயணம் மேற்கொண்டு, ஒவ்வொரு முறையும் ஏ.கே.47 ரகதுப்பாக்கிகள் உட்பட நவீன ஆயுதங்களைப் பாகிஸ்தானிலிருந்து கடத்தி வந்து பஞ்சாபில் குறிப்பிட்ட ஒரு நபரிடம் ஒப்படைத்ததாக வாக்குமூலம் அளித்துள்ளான். இப்பயணங்களுக்கு ''ரா''வே ஏற்பாடு செய்ததாகவும், ஆயுதக் கடத்தலுக்குப் பரிசாக ஏராளமான தொகை அளிக்கப்பட்டதோடு, இந்தியத் துணிகளை பாகிஸ்தானுக்கு கடத்தி விற்க ''ரா'' உதவியதாகவும் அமிர்தசரிலுள்ள கூட்டு விசாரணை மையத்தில் ஒப்புக் கொண்டான்.

இதுபற்றி எல்லைப் பாதுகாப்புப் படையின் ஐ.ஜியும், மாநில உள்துறை அமைச்சகமும் ''ரா''வின் உயர் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதி விளக்கம் கேட்டும் கூட, இன்று வரை ''ரா''விடமிருந்து பதிலேதும் வரவில்லை.

பாசிச ராஜீவ் கும்பலின் விசுவாச உளவுப் படையான ''ரா'' அரங்கேற்றிவரும் இச்சதியின் நோக்கம் மிகத் தெளிவானது. கடத்தி வரப்பட்ட ஆயுதங்களில் பாகிஸ்தான் முத்திரை இருப்பதைக் காட்டி, சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஆயுத உதவியளித்து நாட்டைத் துண்டாட பாகிஸ்தான் சதி செய்கிறது என்று பழி சுமத்தலாம். 'சீக்கிய தீவிரவாதிகள் நவீன ரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குமளவுக்கு முன்னேறி விட்டார்கள்; எனவே கடுமையான நடவடிக்கை தேவை' என்று கூறி தனது அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தலாம். அல்லது கடத்தி வரப்பட்ட ஆயுதங்களை தமது ஏற்பாட்டின்படி எங்கேயாவது 'பதுக்கி' வைத்துவிட்டு, பின்னர் தாங்களே 'கண்டுபிடித்து' அழித்து தீவிரவாதிகளின் முதுகெலும்பை முறித்து விட்டதாக பம்மாத்து செய்யலாம். இப்படி ஒரே கல்லில் கொத்துக் கொத்தாக மாங்காய்களை வீழ்த்தும் நோக்கத்துடன் தான் ரகசிய ஆயுதக் கடத்தலில் ''ரா'' இறங்கியுள்ளது.

இதோடு, தனது ஊழல் கொள்ளை - கிரிமினல் குற்றங்களிலிருந்து மக்களைத் திசை திருப்பவும், உள்நாட்டு நெருக்கடிகளிலிருந்து தப்பிக்கவும், இந்து ஓட்டுக்களைக் கைப்பற்றவும் பஞ்சாப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நீடிப்பது பாசிச கும்பலுக்கு மிக அவசியமாக உள்ளது. எனவே தான் தனது ரகசிய உளவுப் படையான 'ரா' மூலம் சதிகளை அரங்கேற்ற முயற்சிக்கிறது. தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள நாட்டை மீண்டும் ஒரு பேரழிவுக்குள் தள்ளிவிடும் ராஜீவ் கும்பலின் சதிக்கு குடிமக்கள் யாரும் துணைபோக முடியாது. தேசப்பற்று கொண்ட அனைவரும் பாசிச கும்பலின் எத்தனிப்புகளை விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டிய தருணமிது!



படிப்பகம்



# வாழும் உரிமை மறுக்கப்படும்போது...

இது என்ன கொடுமை, கோரம், குரூ வக்கிரம்! இந்தக் காட்சியைக் காணும் மனிதத் தன்மையுடை எவரும் அதிர்ச்சியடையாமல் இருக்கமுடியாது. உணர்ச் டைய எவரும் ஆத்திரப்படாமல் - ஆவேசப்படாமல் இருக் டியாது.


இரண்டு கைகளிலும் விலங்கு பூட்டி, இரண்டு கால்க கழுத்தையும் தடித்த கயிறினால் சைக்கிள் ரிக்ஷாவோடு இ கிக் கட்டி நிர்வாண நிலையில் சைக்கிள் ரிக்ஷாவின் மிதி யிலே திணித்து இழுத்துப் போகிறார்களே இவன் பிணம நினைவு தப்பிப்போய் தலைதொங்கிக் கிடக்கும் இவன் இ மும் உயிர்த்துடிப்புள்ள மனிதன்!

காலைநேரப் பெருநகரத் தெருக்களிலே நீங்கள் பா லாம். இறைச்சிக் கொட்டடிகளில் கொன்று தோலுரிக்கப்ப நகரவை அதிகாரியின் முத்திரை பெற்று ஆடு மாடுகளை இ டித்தான் சைக்கிள் ரிக்ஷா மிதியடியில் போட்டு கசாப் கடைக்கு எடுத்துப் போவார்கள். அதைப்போலத்தான்; போ நிலையச் சித்திரவதைக் கொட்டடியிலே அடித்து நொறுக்கி ம துவமனைக்கு இந்த மனிதனை இழுத்துப் போகின்றன போ மிருகங்கள்.

மருத்துவமனைக்குப் போய்ச்சேரும் வரை இவன் ரோடு இருப்பானா என்று கூறமுடியாது. ஒருவேளை இ மாண்டு போகலாம். அப்புறம் கசாப்புக் கடையிலே செய்வ போலவே மருத்துவமனையில் இவனுடைய உடலைக் கூறு டுவார்கள். பிரேதப் பரிசோதனை என்கிற பெயரில், போ நிலையக் கொட்டடியிலே இவன் தூக்கு மாட்டிக் கொண்ட அல்லது தப்பி ஓடும்போது கீழே விழுந்து மாண்டுபோன என்று மனச்சாட்சியை அடகுவைத்து விட்ட மருத்துவர்கள் மரண அறிக்கை தருவார்கள்!

இவன் ஒரு கிரிமினல் குற்றவாளியாம்! இருக்கட்டு இருந்தாலும் இவன் மனிதன். உயிருள்ள மனிதன் இல்லை

www.padippakam.com
படிப்பகம்



ருந்து பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்ச
காகக் கொண்டு போனபோது லல்லன் குமார் என்ற பத்திரிச்
யாளரால் கடந்த மாதம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இவை

''படமா எடுக்கிறீர்கள், எடுத்துக்கொள்ளுங்கள், எத்த
வேண்டுமானாலும். எங்களுக்கொன்றும் பயமும் இல்லை;
சேபனையும் இல்லை'' என்று எகத்தாளமாக ஏளனச் சிரிட
தான் இந்தப் போலீசு மிருகத்தின் முகத்திலே தாண்டவமா
றது. விசாரணைக் கைதியை சித்திரவதை செய்து கொல்
தண்டனைக்குரிய குற்றமாக இந்தப் போலீசுக்காரன்
வில்லை; பெருமைக்குரிய வீர சாகசமாகவே கருதுகிறான். எ
ருந்து வந்தது இந்தத் துணிச்சல்?

☆ உத்திரப் பிரதேசம் - கொள்ளைக்காரியான ஒரு நிறைம
கர்ப்பிணியைப் பிடித்து போலீசுடன் மோதலில் சாவு எனக்
சுட்டுக்கொன்று நிர்வாணமாக்கி மாட்டு வண்டியிலே வைத்
கட்டி ஊர் ஊராக இழுத்துப் போனார்கள்.

☆ பீகார் - பாகல்பூரிலே 32 அப்பாவி இளைஞர்களைக்
வாளிகள் எனக்கூறி இழுத்துப்போய் சைக்கிள் கம்பியில
கண்களைத் தோண்டி திராவகம் ஊற்றி குருடாக்கினார்கள்
ரீம்கோர்ட் வரை வழக்குப்போயும் குற்றவாளிகளான போலி
தண்டிக்கப்படவில்லை; பதவி உயர்வு பெற்றார்கள்.

☆ உத்திரப் பிரதேசம் - பாக்பாத் நகரிலே திருமணத்துக்
போன குடும்பத்து காரை மடக்கி ஆண்களைச் சுட்டுக்கொ
விட்டு கர்ப்பிணியான மாயாதியாகி என்ற பெண்ணை நிர்வ
மாக்கி பெண் உறுப்பிலே ''போலீசு லத்தி'' சொருகித் துன்பு
ஊர்வலமாக இழுத்துப் போய்க் கற்பழித்தார்கள். இவ்வள
பட்டப்பகலில் நடந்து பத்து வருடங்களாகியும் குற்றவாள
தண்டிக்கப்படவில்லை.

☆ உத்திரப் பிரதேசம் - காசியில் குற்றவாளிகள் பெரு
போய்விட்டார்கள் எனக்கூறி அப்பாவி இளைஞர்களை இ
துப்போய் கைகால்களை முறித்தும், ''காயடித்து'' ஆண்
யைப் பறித்தும் ''சட்டம் ஒழுங்கை'' நிலைநாட்டிய குற்றவ
ளான போலீசுக்காரன்களை ஒன்றும் செய்யவில்லை.

☆ கேரளா - எஸ்டேட் முதலாளிகள் - போலீசு அதிகாரிக
கொண்டாட்டத்துக்காக அப்பப்பாரா கிராமத்து ஆதிவ
பெண்களை இழுத்துப்போய் சாராயம் ஊற்றி நிர்வாணம
நிலவொளியில் ஆடவிட்டார்கள்.

☆ கேரளா - பஸ் வசதி கோரியதற்காக தங்கமணி கிராமத்
புகுந்து பல பெண்களைக் கற்பழித்தனர், போலீசு வெறியர்
விசாரணைக் கமிசன் நிரூபித்த பிறகும் அவர்கள் தண்டிக்க
வில்லை.

☆ மகாராஷ்டிரா - மதுரா; அரியானா - சுமன்ராணி; ஆந்
- ரமீஷா பீவி; பீகார் - பராரியா ஆதிவாசிப் பெண்கள் - ஆ

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



பலர் போலீசு மிருகங்களால் கற்பழிக்கப்பட்டு வழக்கு வந்த போது ''அவர்கள் விபச்சாரிகள்'' என்று கூறி குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர்.

☆ உத்திரப் பிரதேசம் - நாராயண்பூர்; பீகார் - பெல்ச்சி; மணிப்பூர் - ஒய்நாம்; அசாம் - பூம்கா போன்ற கிராமங்களுக்குள் புகுந்து போலீசார் கும்பல் கற்பழிப்புகளை நடத்தினார்கள். இவையும், இவை போன்ற தினசரி நடக்கும் பல கும்பல் கற்பழிப்புகளிலும் ஒருவர்கூட இதுவரை தண்டிக்கப்படவில்லை.

''இப்படி எங்களுடைய சகபாடிகளின் 'வீர விளையாட்டுக்கள்' நடக்காத இடமோ, நாளோ எதுவுமே கிடையாது. பத்திரிக்கைகளில் எழுதியும் படங்கள் போட்டும் என்ன கிழத்து விட்டீர்கள். ஒரு மயிரையும் புடுங்கமுடியாது!'' என்கிற திமிர் - அகங்காரம் இவனுடைய முகத்திலே தெரியவில்லையா?

லஞ்ச ஊழல் - மாமூல் அவர்களுடைய பணிக்குரிய ஊக்க ஊதியமாகி விட்டதைப் போலவே,

சித்திரவதை - படுகொலைகள் அவர்களுடைய வெகுமதி - விருந்துக்குரிய வீரச்சாகசமாகவும்,

கற்பழிப்பு - சூறையாடல்கள் அவர்களுடைய பாராட்டு - சாதனைக்குரிய சுகபோக உரிமையாகவும்

மாறிவிட்டன. எனவேதான் பலர் அறிய பட்டப்பகலில் இத்தகைய அக்கிரமங்களைச் செய்யத் துணிந்து விட்டார்கள்.

இதோ இன்னுமொரு சாட்சியம்: அதே பீகார் மாநிலம். நிலக்கரிச் சுரங்கங்கள் நிறைந்த தான்பாத் நகரம். பந்தரபாலா குடியிருப்பு. இந்த மாதம் 6ந்தேதி. தன் குடிசைக்குள் வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள் மாலதி மஜியான் என்ற ஆதிவாசிப்பெண். அவளுடைய தாயையும் சகோதரனையும் தேடுவதைப்போல குடிசைக்குள் புகுந்தார்கள், வங்கிச்சந்திப்பு நிலையம் மற்றும் பூலி சாவடியைச் சேர்ந்த ஏழு போலீசு வெறி நாய்கள். கம்பு யால் அடித்தான். மற்றவர்கள் அவள் மீது பாய்ந்தார்கள். அவர்களுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்ட மாலதி கூச்சலிட்டுக் கொண்டே குடிசையை விட்டு தப்பி ஓடினாள்.

போலீசு வெறியர்கள் அவளை துரத்திப் பிடித்தார்கள். கற்பழிக்க முடியாமற்போன ஆத்திரத்தோடு பிரதானச் சாலைக்கு இழுத்து வந்தார்கள். அவள் கதறி அழுகவே கூட்டம் கூடியது. அவ்வளவுபேர் முன்னிலையில், பட்டப்பகலில் பதினெட்டு வயதான மாலதி மஜியான் என்ற அந்த ஆதிவாசிப் பெண்ணின் ஆடைகளை கிழித்து நிர்வாணமாக்கி நிறுத்தினார்கள். ஏழு போலீசு வெறிநாய்களும் மாறிமாறித் தமது கம்புகளால் அவளை அடித்தார்கள். அவள் மயங்கிவிழும் வரை அடித்தார்கள். அங்கு கூடிய குடியிருப்புவாசிகள் அதிர்ச்சி - பயத்தினால் சிலையாகி நின்றார்கள். ''கருணை காட்டுங்கள்! காப்பாற்றுங்கள்!'' என்று அந்த அபலை ஆதிவாசிப் பெண் கதறியது யார் காதிலும் விழவில்லை.

அங்கே நின்றிருந்தவர்களில் யாருக்குமே மனிதத் தன்மையோ உணர்ச்சியோ கிடையாதா? அந்த அளவு போலீசு பயங்கரம் நாட்டிலே தலைவிரித்தாடுகிறது. மீண்டும் அவர்கள் அந்தப் பெண்ணின் குடிசைக்குப்போய் சூறையாடிவிட்டுத் திரும்பினர்.

''போலீசாரின் 'கற்பழிப்பு உரிமை'க்கு உடன்பட மறுத்தால் இதுதான் கதி!'' என்று பொதுமக்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கான நடவடிக்கை தானே இது! அந்தப் போலீசுக்காரன்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரி போலிக்கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான தொழிற்சங்கம் ஊர்வலம் நடத்தியிருக்கிறது.

ஒரு மனிதனின் வலது கை குற்றம் செய்துவிட்டதற்காக இடது கை அதைத்தண்டிக்குமா? அதுபோல தனது நிர்வாக இயந்திரத்தின் ஒரு உறுப்பான போலீசின் அக்கிரமங்களை இந்த அரசே தண்டிக்குமா? மாறாக, அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு பயபீதியினால் மக்களை அடங்கி ஒடுங்கி வாழும்படி ஆட்சி நடத்துகிறது. அரசு பயங்கரவாதத்தின் ஒரு அங்கமாக இத்தகைய குரூரமான - வக்கிர அக்கிரமங்களை ஆளுபவர்கள் அங்கீகரித்துள்ளார்கள்.

✱ ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளை விசாரணையின்றி குறிப்பான குற்றச்சாட்டு எதுவுமின்றி அடைத்து வைத்திருப்பது; ✱ போலீசும் துணை இராணுவமும் செய்யும் சட்ட விரோதக் கொலைகள்; ✱ பஞ்சாபிலே அவசரநிலை பிறப்பிக்கவும், அடிப்படை உரிமைகளை ரத்து செய்யவுமான கருப்புச்சாட்டம்; ✱ நாடு முழுவதும், குறிப்பாக பஞ்சாபிலும் நிலவும் பரவலான அரசியல் வன்முறை; ✱ அடித்துத் துன்புறுத்துவது, மின்சாரம் பாய்ச்சுவது போன்றவை உட்பட பல்வேறு முறைகளிலும் அரசியல் கைதிகளை சித்திரவதை செய்வது; மதக்கலவரங்கள் சாதிப்படுகொலைகள், குறிப்பாக மீரட் கலவரத்தின் போது பலர் காணாமற்போனதாகக் கூறி போலீசே சுட்டுக்கொன்று கங்கை கால்வாயில் மிதக்க விட்டது. ✱ வடகிழக்கு இந்தியாவில் இராணுவமும் துணை இராணுவமும் போடும் வெறியாட்டங்கள்.

— இப்படி அடுக்கடுக்கான பல மனித உரிமை மீறல்களை சான்றுகளோடு எடுத்துவைத்து, ஒரு விசாரணைக் கமிட்டி அனுப்புவதாக சர்வதேச மனித உரிமை நிறுவனம் இந்திய அரசுக்கு அறிக்கை எழுதியது.

''இவையெல்லாம் இந்த நாட்டின் உள் விவகாரங்கள் சர்வதேச மனித உரிமை நிறுவனத்தின் நாணயமே சந்தேகத்துக்குரியது. இந்தியாவில் மனித உரிமை மீறல்களே கிடையாது. அது பற்றி விசாரிக்க யாருக்கும் உரிமையும் கிடையாது'' என்று மறுத்துவிட்டது பாசிச ராஜீவ் கும்பல்.

இங்கே மனிதர்களாக வாழும் உரிமைகூட சட்ட பூர்வமாக, அதிகாரபூர்வமாக மறுக்கப்படுகிறது. உயிரே பறிக்கப்படும் போது மனிதர்கள் மட்டுமல்ல, பகுத்தறிவற்ற பிராணிகள் கூட ஆனமட்டும் பலங்கொண்டு திருப்பித் தாக்குகின்றன. ஆம்! அதுதான் ஒரே வழி! திருப்பித் தாக்குவோம். பலாத்காரம் ஒன்றுதான் இந்தக் கொலை வெறி - காமவெறிக் கூட்டத்துக்குப் புரியும் ஒரே மொழி! இனி அந்த மொழியிலேயே பதிலடி கொடுப்போம்.

O மாணிக்கவாசகம்



படிப்பகம்

www.padippakam.com

# ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் தேசியவெறிப் பத்திரிக்கைகள்

"இலங்கை விவகாரத்தில் ஏதும் அந்நியக் கைவரிசை இருக்கிறதா என்றும், அது எந்தக் கை என்றும் புலனாய்வுப் பத்திரிகைகள் கண்டுபிடிக்க வேண்டும்'' எனக் கடந்த மாதம் பிரதமர் ராஜீவ் கேட்டுக் கொண்டார்.

'இது ஏதோ அவருடைய வழக்கமான உளறலகளில் ஒன்றாகத்தான் இருக்கும். இந்திய உளவு நிறுவனமான 'ரா'விடம் ஒப்படைக்க வேண்டிய இரகசியத் துப்பறிவுப் பணியைத் தனது பரம எதிரிகளான பத்திரிக்கைகளைச் செய்யுமாறு பகிரங்கமாகக் கோருவாரா, ராஜீவ்?' என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். உள்நாட்டு விவகாரங்களைப் பொருத்தவரை பத்திரிகைகளும் ராஜீவும் என்னதான் பாம்பும் கீரியுமாக இருந்தாலும் அண்டை நாடுகளின் மீது ஆதிக்க - ஆக்கிரமிப்பு - விரிவாக்க நோக்கங்களில் நெருக்கமாகவே இருக்கிறார்கள். அந்த அளவு தேசியவெறி புரையோடிப் போயிருக்கிறது. எனவே தான் 'இப்போது இலங்கையில் கிளம்பியிருக்கும் இந்திய எதிர்ப்பு அலைக்குப் பின்னணி நமது பகை நாடுகளின் சதி தூண்டுதல் இருப்பதாக' பிரச்சாரத்தை முடுக்கி விடுங்கள், என்பதுதான் ராஜீவின் கோரிக்கை!

குறிப்பாக தேசிய ஏடுகள் என்று சொல்லிக் கொள்ளும் ஆங்கிலப் பத்திரிக்கைகள், உளவுத் துறையினர் உட்பட நாட்டின் எந்த ஒரு பிரிவினரையும்விட அதிகமான அளவு தகவலகளும், உண்மை விவரங்களும், இரகசியங்களும் அறிந்தவை. ஆனால் அவற்றைத் தமது வியாபார அவசியத்துக்கேற்ப கொஞ்சம் வெளியிடுகின்றன. தேசிய வெறி காரணமாக பெரும்பாலானவற்றைத் திரித்தும், இருட்டடிப்புச் செய்தும் திசை திருப்பி விடுகின்றன. இலங்கை - ஈழ விவகாரம் இதற்கு ஒரு நல்ல சான்று!

### ஆங்கில ஏடுகள்: ஆரம்பத்திலிருந்தே ஈழ எதிர்ப்பு - தேசிய வெறி!

1983 தமிழினப் படுகொலையைத் தொடர்ந்து தமிழகமே கொதித்தெழுந்தது! மூலையிலே முடங்கிக் கிடந்ததுகளும், சுயநலனின் மொத்த உருவங்களும் கூட ஆத்திரமும் ஆவேசமும் காட்டினர்! அந்தச் சில வாரங்களில் சிங்கள இனவெறியர்களின் அக்கிரமங்கள், தாக்குதலுக்கு எதிராக, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எல்லா ஏடுகளுமே நீலிக்கண்ணீர் வடித்தன. இலங்கையின்மீது படையெடுத்து ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற திராவிடக் கட்சிகளின் கொள்கையைப் பல 'தமிழர் - இன' ஏடுகள் ஆதரித்தன. 'என்னவானாலும் அது உள்நாட்டு விவகாரம், இந்தியா தலையிடக் கூடாது' என்று 'பார்ப்பனிய - தேசிய' ஏடுகள், குறிப்பாக ஆங்கில ஏடுகள் அனைத்துமே எழுதின. அது அவர்களுடைய சொந்தக் கொள்கையல்ல. ஏனெனில் பின்னால் ராஜீவ் படையெடுத்தபோது அவர்கள் எதிர்க்கவில்லை; ஆதரித்தனர்.

அதுமட்டுமல்ல, இலங்கை - ஈழப்பிரச்சினையில் தலையிடுவதற்கான இரகசியத் தயாரிப்புகளில் ராஜீவ் கும்பல் ஈடுபட்டிருந்ததும் அந்த ஏடுகளுக்குத் தெரியும். தனது பிராந்திய ஆதிக்க, ஆக்கிரமிப்பு, விரிவாக்க நோக்கங்களோடு பல திட்டமிட்ட சதி வேலைகளில் இந்திய அரசு இறங்கியது. தனது உளவுப் படையான 'ரா' மூலம் ஈழப் போராளி அமைப்புகளுக்குள் ஊடுருவித் தனது கைக்கூலிகளை - உருவாக்கியது. போராளி அமைப்புகளுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்யும்படி ஏவியது. போராளிகளையே பிளவுபடுத்தி ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும்படி செய்தது. ஜெயவர்த்தனே கும்பலுடன் சேர்ந்து கொண்டு இரகசிய பேரங்கள் நடத்தி ஈழத்தில் ஒரு பொம்மை அரசை நிறுவுவதற்கான சதியில் ஈடுபட்டது.

இவை அனைத்தும் பற்றிய இரகசியங்களை முழுவதுமாக அறிந்திருந்தும் முதலாளித்துவ ஏடுகள் அனைத்தும் இருட்டடிப்புச் செய்தன. அதே சமயம் ஈழப்போராளி அமைப்புகளின்மீது தமிழகத்து மக்களுக்குள்ள ஆதரவு, அபிமானத்தை நீக்கி அவற்றைத் தனிமைப்படுத்தும் நோக்கத்தோடு ஈழப்போராளிகளுக்கு எதிரான அவதூறுப் பிரச்சாரங்களைச் செய்தன. சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனேயின் போடி உட்பட ஈழவிடுதலைக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பின; தமிழில் துக்ளக்கும், ஆங்கிலத்தில் இந்துவும் இந்த இயக்கத்துக்குத் தலைமையேற்றன.

தெற்கு ஆசிய பிராந்தியத்தின் நாட்டாண்மைக்காரனாகி ஜெயவர்த்தனே கும்பலுக்கும் - ஈழப்போராளிகளுக்கும் இடையே பஞ்சாயத்துக்கள் - பேரங்கள் நடத்தும்போது ஈழப்போராளிகளை உருட்டி மிரட்டியது; சிறைப்பிடித்துத் துன்புறுத்தியது; ஆயுதங்கள் - தளவாடங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தது - ஆகிய பாசிச ராஜீவ் கும்பலின் அடாவடித்தனங்களை எந்த முதலாளித்துவ ஏடும் எதிர்க்கவில்லை. இவற்றிலெல்லாம் தமிழகப் போலீசின் திறமையையும் ராஜீவின் துணிச்சலையும் பாராட்டின.

அதன்பிறகு, ராஜீவ் - ஜெயவர்த்தனே துரோக ஒப்பந்தம் வந்தது. மற்ற பிற ஈழப் போராளி அமைப்புகளை மிரட்டியும், விலைபேசியும் வளைத்துப்போட்டது, ராஜீவ் கும்பல். ஆனால் புலிகளுடன் நடத்திய பேரங்கள் தோற்றுப் போகவே ஈழ ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்துத் தொடர்ந்து நடத்துகிறது. சிங்கள இனவெறி ராணுவம் நடத்திய அக்கிரமங்களை விஞ்சிவிடும் அளவு ஈழத்தமிழர்களுக்கு எதிராகப் படுகொலைகள், கற்பழிப்பு, சித்திரவதை, சூறையாடல்களைத் தொடர்கிறது. இந்திய ஆக்கிரமிப்புப்படை ஈழத்தில் ஒரு மோசடித் தேர்தலை நடத்தி துரோகிகளின் பொம்மை அரசை நிறுவியது.

இவை அனைத்தும் பற்றிய உண்மை விவரங்களை அரசு அதிகாரிகளுடன் உள்ள நெருக்கமான உறவுகள்; தமது சொந்த நிருபர்கள் அனுப்பும் தகவல்கள் ஆகியவை மூலம் முதலாளித்துவ ஏடுகள், குறிப்பாக ஆங்கில ஏடுகள் நன்றாகவே தெரிந்திருந்தன. இருந்தும் பாசிச ராஜீவ் கும்பலின் ஆக்




''யானை''யை எதிர்க்க என்ன துணிவு வேண்டும் என்பதாக - தி வீக்



படிப்பகம்

கிரமிப்பு - ஆதிக்கப்போரை அவை ஆதரிக்கின்றன. இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் - இழப்புகள்; அதற்கு எதிராக இலங்கை மக்கள், குறிப்பாக ஈழத்தமிழர்களின் வெறுப்பு; புலிகளுக்கு ஈழத் தமிழர்களிடையே உள்ள ஆதரவு; இலங்கை அரசே சிங்கள மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போயிருப்பது - ஆகிய செய்திகளை இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் ரிட்டா செபஸ்தியன், டெலிகிராப் நிருபர் சங்கர்சன் தாகூர், இந்து நிருபர் ஜெயராஜ், ட்நிருபர் வெங்கிடராமன் போன்றவர்கள் எழுதுகிறார்கள்.

www.padippakam.com

இருந்த போதும், தலையங்கங்கள், சிறப்புக் கட்டுரைகள் மூலம் நேரெதிரான கருத்துக்களைப் பரப்புகின்றனர். ஆரம்பத்தில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு, பிறகு அதைவிட்டு வன்முறைப் பாதையைப் புலிகள் மேற்கொண்டதாகவும், ஈழத்தமிழர்களிடம் ஆதரவின்றி மிரட்டிக் காரியங்களைப் புலிகள் சாதித்துக் கொள்கிறார்கள்; ஏறக்குறைய புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என்றும் செய்திகள் தருகிறார்கள்.

''இந்தியாவின் பிராந்திய நலன்களுக்காகவும் இலங்கையின் ஒருமைப்பாடு ஐக்கியத்துக்காகவும் இந்திய அரசு மேற்கொண்டுள்ளவை அவசியமான நடவடிக்கைகள்'' என்பதாக ஆங்கில ஏடுகள் பகிரங்கமாகவே எழுதின. பலம் வாய்ந்த இந்தியா இந்தப் பிராந்தியத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முயலுவது இயல்பானது, நியாயமானதுதான்; ஆனால் அதை இன்னும் திறமையாக ராஜீவ் செய்ய வேண்டும். வியத்நாமில் அமெரிக்காவும் ஆஃப்கானில் ருஷ்யாவும் செய்ததைப்போல் சிக்கிக் கொள்ளக்கூடாது என்று எச்சரித்து உபதேசிக்கும் வகையிலேதான் எழுதின. யாழ்ப்போரும், இந்திய இராணுவ இழப்புகளையும் கண்டபிறகு 'புலிகளின் ஒப்புதலின்றி ஒப்பந்தம் போட்டு, இலங்கைக்கு படையனுப்பியது குறித்து' ஓரிரு ஏடுகள் மட்டும் சந்தேகம் தெரிவித்தன. மற்றபடி இந்தப் பிராந்தியத்தின் போலீசுக்காரனாக - துணை வல்லரசாக இந்தியா வளர்ந்து விட்டது என்று ஏகாதிபத்திய ஏடுகள் எழுதிய பிறகு அதையும் பெருமைக்குரியதாகவே சித்தரித்தன. சர்வ தேசிய ரீதியில் இந்தியாவின் வல்லமையை ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரைகள் எழுதின.

இப்போது புலிகள் - பிரேமதாசா பேச்சு வார்த்தை தொடங்கி, இந்திய இராணுவத்தை வெளியேற்றும் நிர்பந்தம் எழுந்த பிறகு அந்த ஆங்கில - தேசிய ஏடுகள் மேலும் அப்பட்டமாகத் தமது தேசிய வெறியைக் காட்டுகின்றன. சில ஏடுகளைச் சான்றாகப் பார்ப்போம்:

**இந்தியன் எக்ஸ்பிரசு -**
**அருண்சோரிக்கு, உள்நாட்டில்**
**நாணயமற்ற ராஜீவ் அண்டை**
**நாட்டின் நியாயவானாம்!**

பாசிச ராஜீவுக்கு எதிராக 'தர்மயுத்தம்' நடத்தும் இந்தியன் எக்ஸ்பிரஸ் - அதன் புலனாய்வுப் புலி அருண்சோரியின் யோக்கியதையைப் பாருங்கள்! உள்நாட்டு விவகாரங்களைப் பற்றி எழுதும்போது, ''இவ்வளவு நாணயமற்ற ராஜீவ் நமது நாட்டின் சார்பாக பீகிங்கில் எல்லைப்பிரச்சினை பற்றியும், கொழும்பில் இராணுவத்தலையீடு பற்றியும் பேசி முடிவு செய்கிறாரே' என்று புலம்பினார்கள். ஆனால் அதே ராஜீவின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க முயற்சிகளை மட்டும் எவ்வளவு தூரம் தாழ்ந்துபோய் ஆதரிக்கிறார்கள்!

இந்திய இராணுவத்தை விலக்கிக் கொள்ளும்படி பிரேமதாசாவின் கோரிக்கை வந்த அடுத்த நாளே, ''வரவேற்கத்தக்க படைவிலக்கம்'' என்று தலைப்பிட்டு தலையங்கம் எழுதியது இந்தியன் எக்ஸ்பிரஸ். 'அதிபர் பிரேமதாசா கோருவதில் தவறானதோ திடீரென்ற முடிவோ எதுவும் இல்லை. அவர் பதவியேற்றதும், ராஜீவ் ஏற்கனவே கோடிகாட்டியது தான் படைவிலக்கம். இப்போது பிரேமதாசா கெடு வைத்திருப்பதானது சில பார்வையாளர்கள் சித்தரிப்பதுபோல திடுதிடுப்பென்று வருவதல்ல. நவம்பரில் சார்க் மாநாடு கூட வேண்டியுள்ளது; சுயமரியாதையுடைய எவரும் அந்தச் சமயத்தில் அந்நிய ராணுவம் தன் மண்ணில் இருப்பதை ஏற்க முடியாது - ஜூலை 29 கெடுவைத் தீர்மானிப்பதற்கான இந்தக் காரணத்தைத் தைரியமாகவே கூறியுள்ளார். ஒரு அரசியல்வாதிக்குரிய முறையில் அதை அவர் அறிவித்தார்; இலங்கையின் இன்றைய நிலைமைகளில் அது அரசியல் குணம் பெற்று விட்டது. பிரேமதாசாவின் உள்நாட்டு நிர்பந்தங்கள் மட்டுமல்ல; இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து சாத்தியமான விரைவில் விலக்கிக்கொள்வது இந்தியாவுக்கும் நல்லதுதான். செமந்தந்துறை தமிழர் - முஸ்லீம்களிடையான கலவரம் போன்றவை மீண்டும் நடக்கலாம். இலங்கையின் உள்நாட்டு சக்திகளிடையேயான மோதல்களில் அதிக அளவு அமைதிப்படை இழுக்கப்படலாம். அதைத் தவிர்க்கவும், அமைதிப் படை பணி ஏறக்குறைய முடிந்து விட்டதாலும் படைவிலக்கம் அவசியமானது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ன சொல்கிறது என்பதன் மீதான் சச்சரவுகளால் பயனில்லை. அபாயமான சிக்கலின் பஞ்சாயத்துக்காரனாக அமைதிப்படை தள்ளப்படக் கூடாது' என்று சாராம்சமாக ஜூன் 3ந்தேதி தலையங்கம் இருந்தது.

அப்போது படைவிலக்கம் பற்றி ராஜீவ் முடிவெடுத்திருக்கவில்லை. பிரேமதாசா வைத்துள்ள கெடுவுக்குள் படைவிலக்கம் சாத்தியமில்லை என்பதிலிருந்து தொடங்கி பல காரணங்களையும் கூறி ஆக்கிரமிப்பு நீடிக்கும் என்பதை ராஜீவ் அறிவித்தார் அவ்வளவுதான்! ராஜீவின் பரம எதிரி எனப்படும் இந்தியன் எக்ஸ்பிரஸ் - அருண்சோரி ''திடீர்பல்டி'' அடித்தார். ''ஒரு சருக்கலான பாதை'' என்ற தலையங்கம் எழுதினார். பிரேமதாசா, ராஜீவ் இருவருமே சட்டபூர்வமாகப் பார்வாத அணுகுமுறையை மேற்கொள்வதாக ஒப்புக்குக் குறை கூறியபோதும் ராஜீவின் நிலைப்பாட்டை ஆதரித்து எழுதினர்.

'தூதரக முறை வழியாக அமைதிப் படை விலக்கத்திற்கான பிரேரணையை முன்வைப்பதற்குப் பதில் ஜூலை 29ஐ பொதுக்கூட்டப் பேச்சுமூலம் கெடுவைத்தது முதலாவதாக விவேகமானது அல்ல. அப்புறம் வெளிப்படையான சர்ச்சையில் இறங்கி ராஜீவ் விவகாரத்தை மோசமாக்கி விட்டார். சமாதான ஒப்பந்தக் கூட்டமைப்புக்குள் சாதுர்யமாகத் தீர்க்க வேண்டியது படைவிலக்கம் போன்ற விவகாரங்கள். ஆனால் ஆத்திரத்தைத் தூண்டும் வகையிலே பகிரங்கமாக பிரேமதாசா கோரினார். சுயமான தோல்வியில் தள்ளக்கூடிய அடம்பிடிக்கும் இம்மாதிரியான - ஆபத்தான முடிவுக்குக் காரணம் உள்நாட்டு விவகாரங்கள் அவரது கண்களைக் குருடாக்கி விட்டது வெளிப்படையானதுதான். முற்றி வெடிக்கும் இம்மாதிரியான விவரங்களில் பரந்து விரிந்த சிக்கலான அனுபவமுள்ள நாடு என்பதற்குப் பொருத்தமாக ஆரம்பத்தில் இந்தியா பொறுமையாகவே கையாண்டது.'




அமைதியான மாட்டுக்கு ஆத்திரமூட்டுவதா என்பதாக - தி டெலிகிரா:ப்



படிப்பகம்

செய்துகொண்டே இருப்பதன் மூலம் வடகிழக்குத் தமிழர் நம்பிக்கையைப் பெறும் முக்கியமான பிரச்சினையை அவர் திசை திருப்பிவிட முடியாது என்பதை பிரேமதாசா உணரவேண்டும். புலிகளின் பலம் வாய்ந்த யாழ்ப்பாணம் உட்பட ஈழத்திலே வரதராஜ பெருமாள் பெருந்திரளாக மக்களைத் திரட்டி படை விலக்கத்தை எதிர்த்து வருகிறார். சட்டபூர்வ - நியாயபூர்வ தமிழர் தலைமையை பலியிட்டு புலிகளுடன் கள்ளக் கூட்டு சேர்வதன் மூலம் பிளவைத் தடுக்கவும் அமைதியை நிலைநாட்டவும் முடியும் என்று பிரேமதாசா கருதினால் அது தவறானதாகும்'.— அதிபுத்திசாலி அருண்சோரியின் ஜூன் 3 மற்றும் 17ந்தேதி தலையங்கங்களை ஒப்பிட்டுப் பாருங்கள், முரண்பாடுகள் - 'திடீர் பல்டி' புரியும். அமைதிப்படை விலக்கத்துக்கு எதிராகத் தமிழ் மக்கள் திரளுகிறார்கள் என்பதே மிகப்பெரிய பித்தலாட்டம். இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் ரிட்டா செபஸ்தியனின் செய்திகள், தினமணியின் தலையங்கங்களே இதற்கான ஆதாரமாக உள்ளன. இருந்த போதும் இந்தியன் எக்ஸ்பிரஸ் - அருண்சோரி என்ற 'உண்மை விளம்பிகள்' புளுகுகின்றனர்.

தொடர்ந்து ஜூன் 22, 26 தேதிகளில் இருதலையங்கங்கள் எழுதியுள்ளனர். அவற்றிலும், ''ஜே.வி.பி.யுடனான உள்நாட்டு சண்டையில் ஈடுபட்டுள்ள பிரேமதாசா, அதைச் சமாளிப்பதற்காக இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு எடுக்கிறார். ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேச நீதிமன்றத்துக்கும் போவதாகவும், கெடுவைத்துப் படைவிலக்கம் கோருவதும் பிரேமதாசாவின் அரசதந்திர சாகசங்கள்தான். மூர்க்கத்தனமும் கவர்ச்சிவாதமும் இணைந்த நாட்டுப்புற அரசியல்வாதி பிரேமதாசா. படைவிலக்கம் குறித்து இருதரப்பும் பேசிமுடிசெய்வதை மறுப்பதற்கான காரணம் எதையும் கூறமறுக்கிறார். ஜே.வி.பியுடன் மட்டுமல்லாது கட்சிக்குள்ளும் காமினி திசநாயகா, தொண்டமான் போன்ற ஜெயவர்த்தனே ஆதரவாளர்களுடனும் ஏற்பட்டுள்ள மோதல் காரண எதிர்ப்புக் கூச்சல் போடுகிறார். புலிகளை நம்பி அதனுடன் கூடிக் குலாவிக்கொண்டு மற்ற ஈழப்போராளி அமைப்புகளின் கதி, ஈழத்தில் ரத்தக்களறி ஏற்படும் அபாயம் ஆகியவற்றைப் பார்க்கத் தவறுகிறார்' என்று பாசிச ராஜீவ் கும்பலின் அதே வாதங்களை வைக்கிறது அதன் பரம எதிரியான இந்தியன் எக்ஸ்பிரஸ் - அருண்சோரி கூட்டம்.

### நடுநிலை ஏடுகளின் நயவஞ்சகம்: தேசிய வெறிக்குத் தூபம்!

இந்திய ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே நடக்கும் சண்டையில் நடுநிலை, நாட்டு நலன்கள் என்று வேடம் போடும் 'இந்தியா டுடே' போன்ற ஏடுகளும் கூட பாசிச ராஜீவ் கும்பலின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க நடவடிக்கைகளை ஆதரிக்கின்றன. கடைசியாக வந்த 'இந்தியா டுடே' ஏடு 'படைவிலக்கம் பற்றிய சங்கடமான நிலை' என்றொரு தலையங்கம் எழுதியுள்ளது. அதிலே பிரேமதாசா, ராஜீவ் ஆகிய இருவருமே இந்த அரசுதந்திரச் சிக்கலை சாதுர்யமாகப் பேசி தீர்க்கத் தவறி விட்டதாக தொடங்குகிறது. பல காரணங்களுக்காக ராஜீவ் ஏற்கனவே படை விலக்கத்தைத் தொடங்கிவிட்டார். ஆனால் உள்நாட்டு நெருக்கடி காரணமாக குறுக்கு வழியிலே பாய்ந்து, காரியசித்தமாக இல்லாது பீதியை கிளப்பிவிடும் வகையிலே படைவிலக்கத்திற்குக் கெடுவைத்து விட்டார் பிரேமதாசா. அரசு தந்திரம் மற்றும் இராணுவ ரீதியில் அவமானம் நேரும் வகையிலே, அதுவும் தேர்தல் நெருங்கும் சமயத்தில் படைவிலக்கத்துக்கு ராஜீவ் ஒப்புக்கொள்ள முடியாது. அப்படியே செய்தாலும் போட்டிப்போராளி குழுக்களுக்கிடையே சண்டை மூண்டு ரத்தக்களறி ஏற்படும். எனவே படிப்படியான படை விலக்கத்துக்கு ஒப்புக் கொள்ளும் அதே சமயம் அமைதிப்படை உருவாக்கி வரும் தமிழ் போலீசுப்படைக்குப் பயிற்சியும் அதிகாரமும் அளிக்கும்படி இலங்கை அரசின் கையை முறுக்கி மிரட்டிப் பணிய வைக்கவேண்டும்' என்று பகிரங்கமாகவே எழுதுகிறது.



'அமைதிப் படை'யைக் கண்டு அலறும் பிரேமதாசா - தி வீக்

ரையில், ''மக்கள் தொண்டர்படை திரட்டிப் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுக்கிறது இந்திய இராணுவம்; படை விலக்கம் செய்ய நேருமானால் அப்படையிடம் போதிய அளவு ஆயுதங்களை கொடுத்துவிட்டு வரவும் முடிவு செய்துள்ளது. இன்னும் கூடுதலான இராணுவத்தை அனுப்பி புலிகளை அழிக்கவும் முயலக்கூடும். இலங்கை அரசும் புலிகளுக்கு ஆயுதங்களைத் தருகிறது. எவ்வாறாயினும் முந்தைய ரத்தக் களறியையும் மிஞ்சிவிடும் அளவு மீண்டும் சண்டை நடக்கும்'' என்று தனது கணிப்பை எழுதுகிறது 'இந்தியா டுடே'. ஆகவே, இந்தியாவின் ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்க சதிநடவடிக்கைகளை அறிந்தே தூக்கிப் பிடிக்கிறது.

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தின் ''சிற்பி'' என்று கூறப்படும் போலிக் கம்யூனிஸ்டுகளின் முன்னாள் சகபாடி ராமின் இந்து ஏடு பாசிச ராஜீவ் கும்பலுக்கு வக்காலத்து வாங்குவதில் வியப்பேதுமில்லை. எப்படியானாலும் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று ராஜீவை விட பிடிவாதமாக எழுதுகிறது. ''இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக தமிழ், சிங்கள, முஸ்லீம் தீவிரவாதிகள் ஒன்று சேர்ந்துள்ளனர். அமைதிப்படைக்கு எதிரான ஆத்திரம் - வெறிதான் பிரேமதாசாவையும் புலிகளையும் இணைக்கிறது. ஏனெனில் அமைதிப்படைதான் ஒப்பந்தத்தின் முக்கிய கருவியாக உள்ளது. இலங்கையின் நலன்களுக்கு எதிராகவும், அதன் எந்தப் பிராந்தியத்தின் மீதும் இந்தியாவுக்கும் அமைதிப் படைக்கும் எவ்வித சதிநோக்கமும் கிடையாது. இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் காப்பதற்காக உயிரும் - பொருளுமாக இந்தியா எவ்வளவோ தியாகம் செய்துள்ளது. ஆனால் பிரேமதாசாவின் செயல்பாடுகள் தேசிய வெறியாகவும், விவாதங்கள், சமரசம், ஒத்த கருத்தை உருவாக்கு என்கிற பெயரில் பயங்கரவாதிகளிடம் சரணடைவதாகவும் உள்ளது.''

''இதுவரை இந்த விவகாரம் முழுவதையும் மிகச் சரியாகவே இந்திய அரசு கையாண்டு வருகிறது. 'இந்திய இராணுவத்தின் மதிப்பு, மரியாதை, நல்லபெயர், உணர்வுகள் ஆகியவை உட்பட இந்தியாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் நியாயமான அயலுறவுக் கொள்கைகளை கவனத்தில் கொண்டு பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இந்திய இராணுவத்தை ஈடுபடுத்தியதே தவறானது என்று சில எதிர்க்கட்சியினர் கூறுவது விபரீதமானது; இலங்கையின் பயங்கரவாதிகளும், இனவெறியர்களும் கை கோர்த்துக் கொண்டு அமைதிப்படை மீது பழிபோட்டுப் பந்தாடவோ அதை அவமதிக்கவோ அனுமதிக்கவோ கூடாது'' என்று ஜூன் 10, ஜூன் 19ந் தேதிகளில் தலையங்கம் எழுதியது இந்து.

### அடிவருடி ஏட்டின் அப்பட்டமான தேசியவெறி – போர் மிரட்டல்.

ராஜீவின் எதிரிகள், நடுநிலையாளர்கள் என்று கூறும் இவர்களே ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்க நோக்கங்களை ஆதரிக்கும்போது ராஜீவின் எடுபிடி ஏடுகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இந்த வகையிலே முன்னணியில் நிற்பது கூலி எழுத்தா


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




சிங்கள இனவெறியிடம் சிக்கிக் கொண்டுள்ள பிரேமதாசா - தி இந்து

ளா அக்பரை ஆசிரியராகக் கொண்ட காங்கிரசு எம்.பி.யின் கல்கத்தா ஏடு 'தி டெலிகிராஃப்'. ''பிரேமதாசாவுடன் பேசிவிட்டு அரசு விமானத்தின் மூலம் காடுகளில் உள்ள பதுங்குமிடங்களுக்குப் புலிகள் திரும்பியதை அவருடைய நாட்டைக் காப்பதற்காக ரத்தம் சிந்திய இந்திய இராணுவம் அதிகமாகும் கோபத்தோடு கவனித்தது. மற்றவர்களைப் போலவே ராஜீவைக் குறைத்து மதிப்பிடுகிறார், பிரேமதாசா. எப்போதும் தயாராய் உள்ள தனது ஆயுதத்தைப் பிரயோகித்துள்ளது புதுடில்லி. இவ்வளவு அப்பட்டமாக பிரேமதாசா மாறும்போது, ராஜீவ் தான் யாரென்பதைக் காட்டுவதற்கு வெகுநேரம் ஆகாது. இந்தியர்களை வெளியேற்றினால் தனி ஈழத்தைப் பிரகடனம் செய்வோம் என்று வரதராஜப் பெருமாள் அறிவித்ததே பிரேமதாசாவை சுயநினைவுக்குக் கொண்டு வந்திருக்கும். ஜெயவர்த்தனேவுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்காக இந்திய இராணுவம் அனுப்பப்படவில்லை என்பதை பிரேமதாசா மறந்து விட்டார். இந்தியாவின் நலன்களும் கூட சம்பந்தப்பட்டிருக்கிறது. தமிழர்களைக் காப்பதோடு, இந்தியாவுக்குப் பகையான சக்திகள் இலங்கையைப் பயன்படுத்துவதை முறியடிக்கவும் தான் போயுள்ளது. பலவீனமாய் இருந்தும் மிகவும் அலட்டிக் கொள்கிறார் பிரேமதாசா. ஜூலைக்குள் இந்திய இராணுவம் நிச்சயம் வெளியேறாது. புலிகளோடு சேர்ந்து தாக்குதல் தொடுத்து அதை விரட்டிவிட எண்ணுவாரானால் அது பேரழிவைத் தரும். தற்போதைய மோதலை டெல்லி வரவேற்கவில்லை; பிரேமதாசாவே சிக்கலில் மாட்டிக்கொண்டார்; தப்பித்துக் கொள்ளும் வழியை அவர்தான் தேடிக் கொள்ளவேண்டும்'' என்று மிரட்டி எச்சரிக்கை விடுக்கிறது, 'தி டெலிகிராஃப்' ஜூன் 8 தலையங்கம்.

''இந்தியப்படை விலக்கம் கோருவதன் மூலம் இந்தப் பிராந்தியத்தின் இந்திய எதிர்ப்புக் குரலாக மாறி, இந்தியாவின் தலையீடு இல்லாமல் உள்நாட்டு கலகக்காரர்களுடன் சமாதானமாகிவிட பார்க்கிறார், அதிபர் பிரேமதாசா. ஆனால் விவகாரத்தில் இந்தியா நேரடியாக பங்கேற்ற பிறகு அதன் ஒப்புதலின்றி எதுவும் செய்ய முடியாது. பிரேமதாசா விரும்பியபடியெல்லாம் பணயம் வைப்பதற்காக விலைமதிப்பற்ற 1500 உயிர்களை இந்தியா பலிகொடுக்கவில்லை. கொழும்பு நம்பிக்கைக்குரிய முறையில் நடந்து கொள்ளாதபோது, இந்தியா மட்டும் அதன் நலனுக்காக பாடுபட வேண்டிய காரணம் எதுவும் இல்லை. எனவே, நாசவேலை பயன்படுத்துவது நியாயமானதுதான். அதற்காகத்தான் இப்போது ''டெலோ'' அமைப்பிற்கு பயிற்சியும் ஆயுதங்களும் தருகிறது. புலிகளுக்கு அடுத்து பலம்வாய்ந்த ''டெலோ''வினர் சிங்களர்களையும் புலிகளையும் மகிழ்ச்சியோடு எதிர்த்துப் போரிடுவார்கள். வடக்கிலே ஒரு கட்டுப்பாடான இந்திய இராணுமும், அதற்கு ஆதரவாகப், பிரிவினை கோரும் ஒரு கலக சக்தியும் சேருவது மரண அடிகொடுக்கும் ஆயுதமாக இருக்கும். இலங்கையின் ஐக்கியத்தைப் பாதுகாக்கப் போன இராணுவம் ஒரு தமிழ் ஈழத்தை உருவாக்குவதாக முடிவது உச்சகட்டமான முரணாக இருக்கும். சைப்பிரசின் பாணியிலே இந்தியாவின் ஆதிக்கத்திலுள்ள ஒரு காப்பரசை ஈழத்தில் நிறுவுவதைவிட இது குறைவானதுதான். ஆனாலும் அதற்கான பொறுப்பாளி பிரேமதாசா தான்! என்று பகிரங்கமாகவே உள்ளது ஜூன் 21 'தி டெலிகிராஃப்' தலையங்கம்.

இதற்கு மேலேயும் போகிறது. 'இவ்வளவு பராக்கிரமம் மிக்க அமைதிப்படையைத் துரத்தும்படி தன்னிச்சையாக முடிவு செய்தது அறிவீனமானது. இலங்கையைப் பிளவுபடுத்துவது இந்தியாவுக்குக் கடினமான வேலையே இல்லை. இந்தியா தூண்டிவிடாமலேயே அதன் சுயவிருப்பமாகவே இது நடக்கும். தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழர் அரசாங்கத்தை பிரேமதாசா நீக்கினாலும் அமைதிப்படையின் ஆதரவோடு தனது வேலையைத் தொடரும். அப்போது பிரேமதாசாவுக்கு மும்மடங்கு சங்கடமாகிவிடும்' என்று மேலும் இரு தலையங்கங்களில் 'தி டெலிகிராஃப்' எழுதுகிறது. அதாவது இலங்கையைத் துண்டாடித் தனது பொம்மை அரசை நிறுவி ஆதிக்க - ஆக்கிரமிப்பைத் தொடரும் என்று பகிரங்கமாகவே இலங்கை அரசை மிரட்டுகிறார்கள்.

★ ☆ ★

தேசிய - ஆங்கில ஏடுகள் இப்படி ஆதிக்க, ஆக்கிரமிப்பு, விரிவாக்க நடவடிக்கைகளை ஆதரிக்கும் அதே சமயம், எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா அல்லது கருணாநிதி கட்சிகளின் பிழைப்புவாத அரசியலுக்கு ஏற்ப மாறிமாறி பாசிச ராஜீவ் கும்பலுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளுகின்றன, 'தமிழர் - இன' ஏடுகள். ஜெயவர்த்தனே விரித்த தந்திர வலையில் ராஜீவ் சிக்கிக் கொண்டார் என்று தான் எழுதினவேயொழிய இந்திய அரசின் ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்க நோக்கங்களை இவை அனைத்துமே மூடி மறைத்தன.

ராஜீவின் அடிவருடி ஏடுகளும், அரசியல் பிழைப்புவாத சார்பு ஏடுகளும் இப்படி செய்வது புரிந்து கொள்ளக்கூடியதுதான்.

ஆனால் உள்நாட்டில் ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், ஜனநாயக விரோதப் போக்குகளை எதிர்ப்பதாகக் கூறும் 'எதிர்த்தரப்பு மற்றும் நடுநிலை' ஏடுகளும் கூட ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்கக் கொள்கைகளை ஆதரிப்பதன் மூலம் பாசிசத்துக்குத் துணை போகின்றன. தேசிய வெறி பாசிசம் செழித்து வளர்வதற்கான வளமான தளம் அமைத்துக் கொடுக்கிறது.

◆ ஆர்.கே.,



படிப்பகம்

www.padippakam.com

# ஈழ விடுதலை
# திராவிடக் கட்சிகளின் பேடித்தனம்

குரைக்கிற நாய் கடிக்காது'' என்று சொல்லுவார்கள். எல்லா நாய்களுக்கும் இது பொருந்துமா என்று தெரியாது. ஆனால் விதிவிலக்கு இல்லாமல் எல்லா திராவிடக் கட்சிகளுக்கும் இது பொருந்தும் என்று திரும்பத் திரும்ப அவர்களது நடத்தைகள் காட்டுகின்றன. மிகச் சமீபத்திய சான்று, ஈழத்திலிருந்து இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றும் விவகாரம்; அது பற்றி டெல்லியை ஆளும் பாசிச ராஜீவ் கும்பலிடம் மண்டியிட்டு திராவிடக் கட்சிகள் சமர்ப்பிக்கும் கோரிக்கைகள்.

திராவிடக் கட்சிகளின் வரலாறே இப்படிப்பட்டதுதான் என்பது இன்றைய இளைய தலைமுறையினர் பலருக்கும் தெரியாது. ''அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு!'' என்று மகாதேவி சினிமா வில்லன் வீரப்பா பாணியில் சபதம் எடுத்தார்கள். ''தனி ஒருவனாகி, தள்ளாத வயோதிகனானாலும் காஞ்சிபுரத்து வீட்டுத் திண்ணையிலே திராவிட நாடு, திராவிட நாடு என்று கூவிக் கொண்டே சாவேன்'' என்றார் அண்ணாதுரை. தனிநாடு பிரிவினைத் தடைச்சட்டம் வருகிறது என்று வதந்தி வந்தது. அவ்வளவுதான்! திராவிட நாட்டை உடைப்பிலே போட்டுவிட்டு ஓடி விட்டார்கள், பதவி சுகத்துக்காக வேண்டி!

தில்லை நடராஜனையும், ஸ்ரீரங்கம் ரெங்கநாதனையும் பீரங்கி வைத்துப் பிளப்பது எந்நாளோ?''

என்று முழங்கிய பகுத்தறிவு கும்பலின் தானைத் தலைவர் கருணாநிதி ஆட்சியைப் பிடிக்கும் ஆசையிலே அபிஷேகங்கள் பலவும் நடத்தினார். தேர்தலிலே வெற்றி கிட்டுமா, ஆட்சிக்கட்டில் ஏறமுடியுமா என்று ஆரூடம் பார்க்க நாடி சோதிடருக்கு ஆளனுப்பினார். போலிச் சாமியார் பங்காரு பண்டாரத்தைக் கூட தேடிப்போய் அருள் வாங்கிக் கொள்கிறார்.

போகட்டும்! திராவிட நாடோ பழங்கதை; கடவுள் நம்பிக்கையோ தனிப்பட்ட விவகாரம். ஆனால் பாசிச ராஜீவ் கும்பலின் கருணை - கடாட்சம் பெற்று பதவியிலே ஒட்டிக் கொண்டிருப்பதற்காக ஈழத் தமிழர் நலன்களை அடகு வைக்கிறார்களே, அது இன்றைய விவகாரம்; சகித்துக் கொள்ள முடியாத துரோகம்!

1983 ஜூலை - இலங்கைத் தமிழர் இனப்படுகொலை கண்டு தமிழகமே கொதித்தெழுந்தது. சாதிச் சங்கங்கள், ரசிகர் மன்றங்கள் கூட ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஆத்திரமடைந்தன. ஜெயவர்த்தனேயின் கொடும்பாவி தமிழ்நாட்டுச் சாலைச் சந்திப்புகளில் எல்லாம் எரிந்தன.

இந்தப் பொதுவான எழுச்சி வேகத்தின் போது, அதுவும் இன்னொரு நாட்டின் சூரத்தனம் - உதார் காட்டுவதற்கு திராவிடக் கட்சிகளுக்கு என்ன பயம்? உண்ணாவிரதம், பேரணி, கண்டனக் கூட்டம், மாநாடு, கடையடைப்பு, ரெயில் நிறுத்தம் என்று ஆரவாரம் செய்தது கருணாநிதி கட்சி. ஈழத் தமிழருக்காக உயிரையே தருவேன் என்று முழங்கியவர் எம்.எல்.ஏ. பதவியைக் கூட துறந்தாரே என உடன்பிறப்புக்கள் பெருமை பேசினர். எல்லாம் இந்தியா தலையிடாத வரையில்தான்!

ஈழத்தமிழரைக் காப்பதற்காக சிங்களவர் மீது படையெடுக்கும்படி கருணாநிதி கோரினார். அதற்கு வெளியில் மறுப்புத் தெரிவித்து வந்தபோதும், இலங்கை விவகாரத்தில் தலையிட்டு ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்கப் போர் தொடுப்பதற்கான இரகசிய தயாரிப்பு செய்து கொண்டிருந்தது, ராஜீவ் கும்பல். அதன் உளவுப்படையான ''ரா'' மூலம் ஈழப்போராளி அமைப்புகளுக்குள் ஊடுருவி பிளவுபடுத்தி ஒன்றை ஒன்று அழித்துக் கொள்ள செய்தது. இன்னொரு திராவிடக் கட்சியான எம்.ஜி.ஆர். கும்பல் ஆட்சியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக வேண்டி ராஜீவின் இரகசிய சதிவேலைகள் அனைத்துக்கும் உடந்தையாக இருந்தது.

ஈழத்தில் தமது ஏகபோக ஆதிக்கத்தை நிறுவுவதற்காக ''டெலோ''வைப் புலிகள் கொன்று ஒழித்தனர். அப்போது எம்.ஜி.ஆரின் அரவணைப்பில் இருந்த புலிகள், ''டெலோ''வின் புரவலராய் இருந்த கருணாநிதியை கொஞ்சமும் மதிக்கவில்லை.

''டெலோ'' செயலிழந்து போன பிறகு, ராஜீவ் - எம்.ஜி.ஆர் கும்பலின் சதிகளை எதிர்த்துப் போராடுவதற்குத் துணியாத கோழை கருணாநிதி, 'இனி ஈழப்பிரச்சினை குறித்து பேசவே மாட்டேன்' என்று ஒதுங்கி கொண்டார். ராஜீவ் - எம்.ஜி.ஆர் கும்பல் தமது ஈழ சதித்திட்டங்களைத் திணிப்பதற்காக ஈழப்போராளிகளைக் கைது செய்து, மிரட்டி, ஆயுதங்களைப் பறித்துக் கொண்ட போதும் கூட ஒப்புக்கு ஓரிரு கண்டன அறிக்கைகள் வெளியிடுவதோடு முடங்கிக் கொண்டார், கருணாநிதி. ஈழப்பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளும் நோக்கத்தோடு இந்தி எதிர்ப்பு போராட்டத்துக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்தார்.

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தைத் திணிப்பதற்கான புலிகளுடனான பேரங்கள் தோற்றுப்போகவே, யாழ்ப்போரைத் துவங்கினர். இதிலெல்லாம் ராஜீவ் கும்பலுக்கு உடந்தையாக் இருந்த எம்.ஜி.ஆர் ஓய்வெடுக்க அமெரிக்காவுக்கு ஓடிப்போனார். எம்.ஜி.ஆர் கைவிட்டபிறகு புலிகள் கருணாநிதியின் ஆதரவை நாடினர். அதன் கொண்டு அறிக்கைகள் விட ஆரம்பித்தார், கருணாநிதி. அப்போதும் ராஜீவின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க நடவடிக்கைகளை எதிர்க்கவில்லை. 'மணம் முடித்து வைக்கப்போன புரோகிதரே தாலி கட்டிவிட்டார். அதாவது புலிகளின் ஒப்புதலின்றி ஒப்பந்தம் போட்டுவிட்டார், ராஜீவ்' என்றுதான் கூறினர்.

யாழ்ப்போர் உக்கிரமாக்கி இந்திய இராணுவம் கொலை வெறியாட்டம்போடத் துவங்கிய பிறகும் 'சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனேயின் சூழ்ச்சி - தந்திரங்களுக்கு ராஜீவ் பலியாகி விட்டார்' என்றுதான் கருணாநிதி கட்சி வருணித்ததே தவிர 'ராஜீவின் ஆக்கிரமிப்புப்போர்' என்று ஒரு போதும் கூறத துணியவில்லை. யாழ்ப்போர் தீவிரமானபோது கருணாநிதியின் சவடால்கள் உச்ச கட்டத்துக்குப்போயின. இன்று தனது பதவியைக் காத்துக் கொள்வதற்காக ராஜீவின் முன்னே போய் எப்படிக் கூனிக்குறுகிக் கும்பிடு போடுகிறார் என்பதோடு அன்றைய கருணாநிதியின் சவாடல்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்!

''ஈழத்தமிழருக்காக 50,000 பேர் சிறை சென்றோம். 20 பேர் தீக்குளித்தனர். மீண்டும் அந்த நிலையை உருவாக்காதீர்'' என்று வேண்டிக்கொண்டார். ''குமரப்பா, புலேந்திரன் போன்ற 13 பேர் தமிழுக்காக, தமிழ் மண்ணிற்காக உயிர் விட்டனர். அத்தனை பேருக்காக நான் ஏன் அந்த முடிவை எடுக்கக் கூடாது. உயிரைத்தரவும் தயங்க மாட்டோம்'', என்று முழங்கினார். ''ஈழத்தமிழர்களை சுட்டுப்பொசுக்க ஆவடி டாங்கிகளா? வயிறு எரிகிறது. ரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்'' என்று பொங்கி அழுதார். ''நெஞ்சு வேதனையால் வெடிக்கிறது. உயிரைக் கொடுத்து ஈழத்தைக் காப்போம்''. ''5 கோடி மக்களுக்குத் தலைவன் அல்ல; 5 கோடி மக்களுக்காக உயிரைவிடத் தயாராக உள்ள தொண்டன்'' என்று மீண்டும் மீண்டும் உயிர்த் தியாக சபதமெடுத்தார். ''விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழிக்க சதித்திட்டம். இந்தக் கொடுமையைத் தமிழகம் தாங்கிக் கொள்ளாது. இனியும் இராணுவத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் இந்திய அரசுக்கு இறுதி எச்சரிக்கை! என்னையே அர்ப்பணிக்கும் போராட்டத்துக்கு தயார்'' (முரசொலி 31/10/87), இப்படிக் கருணாநிதி எச்சரிக்கைவிட்டு இரண்டு ஆண்டுகளாகியும் புலிகளை அழிப்பது நிற்கவில்லை. இப்போது தாக்குதலை தீவிரமாக்கியுள்ள ராஜீவ் கும்பலோடு ஒரே அலைவரிசையில் ஈழம் பற்றிச் சிந்திப்பதாகக் கூறுகிறார்.


தான் மட்டுமா உயிர் மீது சபதமெடுத்தார், கருணாநிதி? ''புலிகளை அழிக்க இந்திய ராணுவத்தை அனுப்புவதா? அநியாயம்! அக்கிரமம்! ஆணவச்செயல்!'' ''இனியும் தமிழகம் பொறுத்துக் கொண்டிராது'' இந்தக் கொடுமையை வேதனையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. அடுக்குமா இந்த அட்டூழியம்? ''தமிழினம் அழியாமல் காப்போம். போர்க்குரல் எழுப்புவோம்''. ''சிங்கத்தமிழன் உணர்ச்சியைக் காட்டுவோம். வரலாறு படைப்போம்!''. ''கல்தோன்றி மண்தோன்றாமுன் தோன்றிய மூத்த தமிழ்க்குடியின் ரத்தத்தைக் குடிகுடி



படிப்பகம்

www.padippakam.com

# தமிழக சட்டமன்ற தேர்தல்களுக்கு முன்பு ஓட்டுப்பொறுக்கிகள் வேஷம்




என்று குடிக்கிறார்களே! தமிழகமே கொந்தளித்து ஆர்த்து எழட்டும்.'' ''மனப்பால் குடிப்போரின் மமதையை அடக்கிட கிளம்பிற்று காண் தமிழ்ச் சிங்கக் கூட்டம்'' என்று தமிழரிடையே போர்முரசு கொட்டினார், கருணாநிதி.

''தமிழன் ஏமாந்த சோனகிரி, இலங்கைத் தமிழன் முழுவதுமாக அழிந்தால் கூட தமிழ்நாட்டுத் தமிழன் சொரணையற்ற சோத்துத் துருத்திகளாக, மாமிசப் பிண்டங்களாக இருப்பான் என்று ராஜீவ் கருதுகிறார்.'' ''தமிழினம் அழிக்கப்படுகிறது; தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். அமைதிப்படையாம், அமைதிப் படை! இல்லை அமளி உருவாக்கும் படை! ஏன், தமிழனை அழிக்கும் படைக்கு அமைதிப்படையாம்!'' இந்த அநியாயத்தைத் தமிழ் நாடு கேட்காமல் இருந்தால் இதற்கு தமிழ்நாடு என்ற பெயரே பொருந்தாது. இதற்காகவா தமிழ் நாடு என்று பெயர் வைத்தார் அண்ணா? தமிழன் மானத்தோடு, உணர்வோடு, வீரத்தோடு வாழ்வான் என்று தானே பெயர் சூட்டினார்''. ''உணர்ச்சியுள்ள தமிழன்; பிணமாகாமல் இன்னமும் உயிரோடுள்ள தமிழன்; தமிழ்க் குருதி நரம்பு மண்டலத்திலே ஓடுகிற தமிழன்; தலைகுனிந்து கைபிசைந்து, கண்ணீர் மல்கி நிற்பதா? இல்லை! இல்லை! இங்கிருக்கும் தமிழனுக்கும் இதயம் உண்டு. அந்த இதயத்திலே வீரமும் தீரமும் உண்டு தடித்த பிராணியாகி விடவில்லை''. ''நெஞ்சம் வேதனையால் வெடிக்கிறதே! உயிரைக் கொடுத்து ஈழத்தைக் காப்போம்.'' என்று போர்க்கள வீரஉரையாற்றினார்.

கருணாநிதி மட்டுமா? ''பிரபாகரன் தலைக்குக் குறிவைக்கப்படுகிறது. அந்த மாவீரனுக்கு ஏதாவது நேர்ந்தால்..... ரத்த ஆறு ஓடும். தமிழகம் தாங்காது. தமிழகம் ரத்தக்களறியாக மாறும் தமிழ்நாட்டு இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப்போராட வேண்டிய நிலையை ஏற்படுத்தாதீர்'' என்று ஆவேசமடைந்தார் காளிமுத்து. ''ராணுவத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் தமிழர்கள் பொங்கி எழுவார்கள்'' என்று எச்சரித்தார் குழந்தை வேலு. எம்.ஜி.ஆரின் எடுபிடிகளே இப்படி வீராவேசமடையும் போது கருணாநிதிக்குக் கேட்க வேண்டுமா?

''பிரபாகரன் தலைக்கு விலைபேசும் ரத்தக் காட்டேரி ஜெயவர்த்தனே சூழ்ச்சிக்கு இந்திய இராணுவம் பலியாகி விட்டது'' ஜெயலலிதா) என்றும் ''நான் மட்டும் அருகில் இருந்தால் ஜெயவர்த்தனே தலையைப் பந்தாடி இருப்பேன்'' (காளிமுத்து) என்றும் எம்.ஜி.ஆர். எடுபிடிகள் சிந்தித்த அதே பாணியில்தான் தமிழினத் தானைத் தலைவர் கருணாநிதி, தளபதி வீரமணி ஆகியோரும் பேசினர்.

''இந்திய ஆக்கிரமிப்புபோர்'' என்பதாக துணிந்துகூறி வெளியேறுபடி கேட்கவே இல்லை. மனித சங்கிலி போன்ற போராட்டங்களில் கூட ''ஆக்கிரமிப்பு ராணுவமே வெளியேறு'' என்று முழக்கங்கள் எழுந்ததாகக் கேள்விப்பட்டவுடன் பதறிப் போய் விட்டார் கருணாநிதி. ''போரை நிறுத்துங்கள்'' என்பதைத் தவிர வேறு முழக்கம் கூடாது என்று உடன்பிறப்புகளுக்குக் கண்டிப்பான உத்திரவு போட்டார். ''இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோரவில்லை; போரை நிறுத்தும்படிதான் கோருகிறோம்'' என்று தெளிவாக்கிப் பேட்டி கொடுத்தார்.

இதற்குப்பின், இரண்டு ஆண்டுகள் இந்திய ஆக்கிரமிப்புப்போரும், ராணுவ அட்டூழியங்களும் தொடரவே செய்கின்றன. திராவிடக் கட்சிகளோ ஈழத் தமிழர்களை மறந்து விட்டு பிழைப்பு வாத அரசியல் நடத்தப் போய்விட்டார்கள். ''குரைக்கிற நாய் கடிக்காது'' என்பதற்கு எவ்வளவு பொருத்தமாக நடந்து கொண்டார்கள்!

அதுவும் கூட எதிர்க்கட்சியாக இருக்கும் வரையில்தான். ''ஆட்சிக்கு வந்த பிறகு ஈழப்பிரச்சினை குறித்து பொறுப்போடும் ராஜதந்திரத்தோடும் நடந்துகொள்கிறார்'' என்று பார்ப்பனிய ஏடுகள் பாராட்டின. ''நானும் ராஜீவும் ஒரே அலை வரிசையில் சிந்திக்கிறோம்'' என்று பகிரங்கமாக கருணாநிதியே அறிவிக்கும் அளவுக்கு ராஜீவ் கும்பலுக்கு விசுவாசியாக மாறிவிட்டார்.

இப்போது இலங்கை அரசே கோரியும் இராணுவத்தை விலக்கிக்கொள்ள மறுத்து ''இலங்கையைப் பிளவுபடுத்தி தனி ஈழம் அமைப்போம்'' என்று தனது அடிவருடிகளை விட்டு மிரட்டுகிறது ராஜீவ் கும்பல். ''தனிஈழம் அமைந்தால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவேன். இலங்கை அரசுடன் பேசி படிப்படியாக படைவிலக்கம் செய்யலாம்'' என்று ராஜீவ் கும்பலின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் வகையிலே கூறினார் கருணாநிதி. பிறகு கட்சிப் பொதுக்குழுவைக் காட்டி இதையே தீர்மானமாக நிறைவேற்றியுள்ளார்.

''இனப்படுகொலையை, இரத்தக்களறியைத் தடுத்திட இலங்கை அதிபரிடம் உத்திரவாதம் பெற்று இந்தியப் படையைப் படிப்படியாக வாபஸ் பெற வழிவகை செய்ய வேண்டும்'' என்பதுதான் கருணாநிதி கட்சிப் பொதுக்குழு தீர்மானம். புதுடில்லி - ராஜீவ் அரசு இந்த தீர்மானத்தை மெத்த மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கிறது. இதுதானே அவர்களுடைய நிலைப்பாடு எம்.ஜி.ஆரை விட விசுவாசியான, அதே சமயம் திறமையான விசுவாசி கிடைத்து விட்டதாக மத்திய அரசு மேலும் நம்பிக்கையோடு இருக்கிறது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ஈழத்துக்கு ஆதரவாக தமிழகமெங்கும் நிலவிய எழுச்சி இன்றில்லை. மிகமிகச் சிறிய அளவிலான அமைப்புகளின் பிரச்சார இயக்கம் என்பதாகக் குறுகிப் போய் விட்டது. ஈழவிடுதலை இயக்கத்தினரைத் தனிமைப்படுத்தி தேசிய வெறியை வளர்ப்பதில் ஆக்கிரமிப்பு, ஆதிக்க, விரிவாக்கவாதிகள் கணிசமான அளவு வெற்றி பெற்றுவிட்டார்கள்; ஆழமான இன உணர்வு அடிப்படையிலானதாக இல்லாது பிழைப்புவாத கவர்ச்சி அரசியலை வைத்துத் தமிழ் மக்களைத் திராவிடக் கட்சிகள் ஏய்த்து வருகின்றன - ஆகிய உண்மைகளைத்தான் இது காட்டுகிறது.

● மணி



படிப்பகம்

www.padippakam.com



# மீண்டும் ஆர்.எஸ்.எஸ். அபாயம்!

இது தேர்தல் நெருங்கும் நேரம். எனவே தமது குறுகிய ஆதாயங்களுக்காக மதவெறியைக் கிளறிவிட்டுக் கொண்டு புதிய வேகத்துடன் மத வெறியர்கள் கிளம்பி விட்டனர். குறிப்பாக இந்து மதவெறி அமைப்பான ஆர்.எஸ்.எஸ். நீளத்திலும் அகத்திலும் தனது அமைப்பை விரிவாக்கிக் கொண்டு புதிய அச்சுறுத்தலாகப் பரிணமித்துள்ளது. காக்கி அரைக்கால் சட்டை அணிந்த அதன் சுயம் சேவக்குகள் (உறுப்பினர்கள்) தடிகளை ஏந்தி வெளிப்படையாகவே ஆயுதப்பயிற்சி நடத்துகின்றனர். ஆயிரக்கணக்கான அதன் 'சாகா'க்களில் (கிளைகளில்) அன்றாடம் காலையிலுமப் மாலையிலும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. "அரசியல் - கட்சி சார்பற்ற கலாச்சார இயக்கம்" என்ற முகமூடியைக் கழட்டிவிட்டு இப்போது ஆர்.எஸ்.எஸ். மதவெறியர்கள், பாரதீய ஜனதா கட்சியை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர். ஆர்.எஸ்.எஸ். மேடைகளில் பாரதீய ஜனதா கட்சியினர் இந்து வெறியை அப்பட்டமாக கக்குகின்றனர். சுருக்கமாகச் சொன்னால், சமூக சேவை - கலாச்சார அமைப்பு என்ற பட்டு உறைக்குள் இருந்த இந்து மதவெறிக் கொலைவாள் இன்று உதிரம் குடிக்க பகிரங்கமாக கிளம்பி விட்டது.

கடந்த ஆண்டுவரை நெருங்கிய தொடர்புடைய அமைப்புகள் என்றழைக்கப்பட்ட விஸ்வஹிந்து பரிஷத், பாரதீய மஸ்தூர் சங்கம், அகில பாரத வித்யார்த்தி பரிஷத் முதலான 33 அமைப்புகளை இன்று தமது அமைப்புகளே என்று ஆர்.எஸ்.எஸ். அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. இந்து மன்ச், தமிழகத்தின் இந்து முன்னணி முதலானவற்றை தாம் ஆதரிக்கும் அமைப்புகள் என்று பகிரங்கமாக அறிவிக்கிறது. வரப்போகும் தேர்தலில் இந்து வெறியைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தும் நோக்கத்தோடு, தமது சக்தியை நிரூபித்துக் காட்டுவதற்காக ஆர்.எஸ்.எஸ். கும்பல் தம்பட்டம் அடித்துக் கொள்வதாக எண்ணிவிட முடியாது. ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் ஹெட்கேவார் நூற்றாண்டு விழாவையொட்டி கடந்த 6 மாதங்களாக நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து அதன் அமைப்பு பலம் கணிசமாக விரிவடைந்துள்ளது. நாடு முழுவதும் 18,880 கிராமங்கள் - நகரங்களில் 25,000 சாகாக்கள் உள்ளன என்று ஆர்.எஸ்.எஸ்.-சின் குறிப்பு ஒன்று கூறுகிறது. 1979ல் 10 லட்சமாக இருந்த சுயம் சேவக்குகளின் எண்ணிக்கை இன்று 18 லட்சமாக உயர்ந்துள்ளது. இதுதவிர ஆர்.எஸ்.எஸ். சார்புடைய 38க்கும் மேலான அமைப்புகளில் 50 லட்சம் பேர் வரை திரண்டுள்ளனர் என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளே கணக்கிடுகின்றன.

### மதவெறி கலவரத்துக்கு கால்கோள் விழா!

ஆர்.எஸ்.எஸ்.-ன் அசுரத்தனமான வளர்ச்சி வெறுமனே பலத்தைக் காட்டி ஓட்டுக் கட்சிகளிடம் பேரம் பேசுவதற்கானதல்ல. மீண்டும் மதக் கலவரங்களை பெரிய அளவில் கட்டவிழ்த்து விடுவதற்கான முயற்சியே அது. சிறுபான்மையினரான சீக்கியர்களே மத வெறியையும் அரசியலையும் இணைத்து பஞ்சாபை ஆட்டிப் படைக்கும் போது, பெரும்பான்மையினரான நம்மால் ஏன் முடியாது என்ற ஆணவத்தோடு வெறியூட்டி வருகிறது ஆர்.எஸ்.எஸ். பஞ்சாபில் "சர்பத் கல்சா" கூட்டங்களில் சீக்கிய மத குருமார்கள் அரசியல் நிகழ்ச்சிப் போக்கைத் தீர்மானிப்பது போலவே, அண்மையில் அலகாபாத்தில் நடந்த கும்பமேளா விழாவின் போது பல்வேறு இந்துமத அமைப்புகளின் கூட்டத்திற்கு ஆர்.எஸ்.எஸ். ஏற்பாடு செய்தது. "இந்துமதப் பாராளுமன்றம்" என்றழைக்கப்பட்ட இக்கூட்டத்தில், அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்தை (ராமஜென்ம பூமியை) மீட்டது என்றும், நாடு முழுவதிலிருமிருந்து செப். 30 முதல் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒரு செங்கல்லை எடுத்து வந்து கங்கையில் புனித நீராட்டி நவம்பர் 9ம் தேதி முதலாக அக்கோயிலைப் புனரமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் மாதத்தில் இந்து வெறியர்களின் செங்கல் யாத்திரை வெற்றிபெறுகிறதோ, இல்லையோ; ஆனால் மதக்கலவரங்கள் நடக்கப் போவது மட்டும் உறுதி! ஏனெனில் பிரச்சினைக்குரிய அந்த் வழிபாட்டுத் தலத்தை மீட்கத் துடிக்கும் முஸ்லீம் மத வெறியர்கள் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. எனவே அடுத்த கலவரத்தை எதிர்பார்த்துத்தான் இந்து வெறியர்கள் தங்களை அமைப்பு ரீதியில் வலுப்படுத்திக் கொண்டு மதவெறி நஞ்சைக் கக்குகின்றனர். அதன் எதிரொலியாக பாரதீய ஜனதா கட்சியும், சிவசேனாவும் இந்து வெறியர்களின் இம்முடிவை ஆதரித்துப் பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்யத் துவங்கிவிட்டன.

### பாரதீய ஜனதாவின் 'லட்சிய'வெறி!

அண்மைக் காலமாக பாரதீய ஜனதாவின் சுவரொட்டிகளில், "இந்து என்று சொல்வதில் பெருமை கொள்!", "இந்து என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா!" "இந்து விழித்தெழுந்தால் தேசமே விழித்தெழும்" - முதலான முத்திரை வாசகங்கள் பளிச்சிடுகின்றன. ஆர்.எஸ்.எஸ் - உடன் ஊடல் கொண்டிருந்த பாரதீய ஜனதா கட்சி முன்னெப்போதைக் காட்டிலும் தனது கூட்டை வலுவாக்கிக் கொண்டு இந்துமத வெறியை அப்பட்டமாகக் கக்குகிறது. கடந்த மாதத்தில் இமாசல பிரதேசம் பாலாம்பூரில் நடந்த அக்கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூட்டத்தின் முடிவுப்படி பாரதீய ஜனதா மீண்டும் பழைய ஜனசங்க கட்சியின் அவதாரத்தை எடுத்துள்ளது. இதுநாள் வரையில் அயோத்தியிலுள்ள பிரச்சினைக்குரிய வழிபாட்டுத்தலம் பற்றி வெளிப்படையாக



படிப்பகம்

www.padippakam.com

கருத்து தெரிவிக்காமல் இருந்த பாரதீய ஜனதா இன்று அக்கோயில் இந்துக்களுக்கே தரப்படவேண்டும் என்று வானுக்கும் மண்ணுக்கும் எகிறிக் குதிக்கிறது. இதோடு மகாராஷ்டிராவின் பிராந்திய வகுப்புவாத அமைப்பான சிவசேனாவுடன் தேர்தலில் கூட்டுச் சேருவது என்றும் முடிவு செய்துள்ளது. ஆக, வரப்போகும் தேர்தலில் இலவச -கவர்ச்சித் திட்டங்களைவிட, பஞ்சாப் - ஜம்மு - காஷ்மீரில் இந்துக்களுக்குள்ள பாதுகாப்பற்ற நிலை, அயோத்தியிலுள்ள பிரச்சனைக்குரிய வழிபாட்டுத்தலம் ஆகியவற்றை மையப்படுத்தி இந்துமத வெறி முழக்கங்களை முன்னிறுத்துவது என்று தீர்மானித்துவிட்டது.

தனது லட்சியமான காந்தீய சோசலிசத்தை குப்பைத் தொட்டியில் வீசியெறிந்துவிட்டு இன்று பாரதீய ஜனதா இந்து வெறியைக் கக்குவதற்கு, அதை உள்ளிருந்து ஆட்டுவிக்கும் ஆர்.எஸ்.எஸ் - தான் காரணம். 1984 தேர்தலின் போது இந்திரா கொலையை ஒட்டி எழுந்த இந்து மதவெறி அலையின் காரணமாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் காங்கிரசை ஆதரித்தது. பின்னர், ராமஜென்மபூமி / பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் இந்து வெறியர்களுக்குச் சாதகமான நிலை எடுக்காததாலும், ஷாபானு வழக்கில் முஸ்லீம் மதவெறியர்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டதாலும் காங்கிரசுடனான தேனிலவை ஆர்.எஸ்.எஸ். முடித்துக் கொண்டது. அதன்பிறகு காங்கிரசிலிருந்து வெளியேறிய வி.பி.சிங்குக்கு ஆதரவு பெருகுவதைக் கண்டதும் அவரை வளைத்துப் போடும் முயற்சியில் இறங்கியது. ''ராஜரிஷி'' என்ற பட்டம் சூட்டி கௌரவித்தது. ஒருபுறம் ராஜீவை அம்பலப்படுத்திக் கொண்டே மறுபுறம் வி.பி.சிங்கை ஆதரிக்கும் கோய்ங்காவின் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை நிறுவனத்தில் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தபோது ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் அவர்களைத் தாக்கினர். இந்த விவகாரம் அம்பலப்பட்டு நாறியதும் பீதியடைந்த வி.பி.சிங், ஆர்.எஸ்.எஸ். பிடியிலிருந்து நழுவிக் கொண்டார். எனவே அரசியல் அரங்கில் வெறுத் தொதுக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். வேறு வழியின்றி இப்போது பாரதீய ஜனதாவை உசுப்பிவிடுகிறது.

அதற்கேற்ப பாரதீய ஜனதா தலைவர் வாஜ்பாய், ''நாங்கள் ராமஜென்மபூமி விவகாரத்தை தேர்தல் பிரச்சினையாக்க விரும்பவில்லை(!). ஆனால் அரசு அக்கோயிலை எங்களுக்குக் கொடுக்காவிட்டால் இந்துக்கள் அதன் தலைவிதியைத் தீர்மானிப்பார்கள்'' என்று பாரதீய ஜனதாவின் மறைந்து போன தாய்க் கட்சியான ஜனசங்கத்தின் மொழியில் கொக்கரிக்கிறார். அதாவது, பிரச்சினைக்குரிய அந்த வழிபாட்டுத் தலத்தை இந்துக்களிடம் ஒப்படைக்கா விட்டால் வரப்போகும் தேர்தலில் இந்துக்களை காங்கிரசுக்கு எதிராக வாக்களிக்கச் செய்வோம் என்று மிரட்டுகிறார். மறுபுறம் ''ஜனதா தள தலைவர்கள் ஹாஜிமஸ்தானுடன் கள்ள உறவு வைத்துள்ளார்கள்'' என்று அம்பலப்படுத்துகிறார். கள்ளக் கடத்தல்காரனுடன் உறவு வைத்திருப்பதற்காக அல்ல: மஸ்தான் ஒரு முஸ்லீம் என்பதற்காகவே இந்த எதிர்ப்பைக் காட்டி ஜனதா தளத்தை தம்முடன் ஒத்துப் போகும்படி ''பிளாக்மெயில்'' செய்கிறார்.

### ஆர்.எஸ்.எஸ்-இன் இந்துவெறி கணக்கு

''1977ல் ஜனசங்கம் 98 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஆனால் பாரதீய ஜனதா கட்சியோ பாராளுமன்றத்தில் புதிதாக வந்த தெலுங்குதேசக் கட்சியைவிட எண்ணிக்கையில் குறைவாக உள்ளது. இந்து நலன்களுக்காக உறுதியாகப் போராடாமல் இருந்ததே பாரதீய ஜனதாவின் வீழ்ச்சிக்குக் காரணம்'' என்று ஆர்.எஸ்.எஸ்-இன் தலைமையில் ஆதிக்கம் செலுத்தும் நாக்பூர் பார்ப்பனர்கள் கூறுகின்றனர். ''சிவசேனை பகிரங்கமாக இந்து நலனுக்காகப் போராடியதாலேயே பம்பாய், அவுரங்காபாத்தில் வலுவான சக்தியாகப் பரிணமித்துள்ளது. ஆனால் பாரதீய ஜனதா மென்மையான அணுகுமுறையை மேற்கொண்டதால் தொடர்ந்து தேர்தல்களில் வீழ்ச்சியடைந்து வருகிறது'' என்று தமது வெறியூட்டலை நியாயப்படுத்த அபத்தமான காரணங்களை அடுக்குகின்றனர். ஆர்.எஸ்.எஸ்-இன் இரண்டாம் மட்டத் தலைமையினர். டெல்லி நகராட்சி தேர்தல், ஜம்மு தேர்தல்களில் காங்கிரசு கட்சி தொடர்ந்து வெற்றி பெற்றதற்குக் காரணமே இந்து ஓட்டுதான் என்று 'ஆதாரங்களை' திரட்டி கணக்கு போட்டுக் காட்டுகின்றனர்.

ஆக, அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பி இந்து வெறியைக் கிளறிவிடுவது, இந்துக்கள் அனைவரும் தம்பின்னே திரண்டிருப்பதாகக் காட்டி ஓட்டுக்கட்சிகளைப் பயமுறுத்துவது என்ற நோக்கங்களுடன் பாரதீய ஜனதா புற்றிலிருந்து ஆர்.எஸ்.எஸ். நச்சுப் பாம்புகள் கிளம்பியுள்ளன. ''இந்துக்களுக்கு யார் ஆதரவானவரோ அந்த வேட்பாளரை ஆதரிப்போம்'' என்று இதுநாள் வரை கூறிவந்த ஆர்.எஸ்.எஸ். கும்பல், இன்று புதிய நிபந்தனைகளை விதித்து அவற்றை ஏற்கும் வேட்பாளர்களையே ஆதரிப்போம் என்கிறது. அதாவது 1. அயோத்தியிலுள்ள பிரச்சினைக்குரிய வழிபாட்டுத்தலம் இந்துக்களுக்கே தரப்படவேண்டும். 2. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அதிகாரம் அளிக்கும் இந்திய சட்டத்தின் 370வது பிரிவை ரத்து செய்யவேண்டும். 3. பசுவதைக்குத் தடை விதிக்க வேண்டும். 4. சிறுபான்மை இன மக்களுக்கு (இந்துக்கள் அல்லாதோருக்கு) அரசு சிறப்புச் சலுகைகள் வழங்குவதை தடை செய்ய வேண்டும் - ஆகிய பிரதானமான கோரிக்கைளை ஏற்கும் வேட்பாளர்களை மட்டுமே ஆதரிப்போம் என்று இந்துவெறி போதையில் நிபந்தனைகளைப் போட்டுள்ளது.

இதன்படி, ''ஆர்.எஸ்.எஸ்-இன் வேண்டுகோளுக்கிணங்க நூற்றுக் கணக்கான சிறு குழுக்களாக சாதுக்கள் நாடு முழுவதும் இந்து நலன் காக்க பிரச்சாரத்துக்கு செல்வர். இந்துக்களின் ஒற்றுமையைக் கட்டிக் காத்திடவும், இந்துக்களுக்கு வழிகாட்டவும் மதப் பஞ்சாயத்துக்களைக் கட்டியமைப்போம். தேர்தலின் போது இந்து மாமுனிவர்கள் இந்து வேட்பாளர்களை ஆதரித்துப் பிரச்சாரம் செய்வர்'' என்று அறிக்கை வெளியிட்டுள்ளது ஆர்.எஸ்.எஸ். ஆக, வரப்போகும் தேர்தல் திருவிழா கோலாகலமாக இருக்கும். சங்கராச்சாரியிலிருந்து நிர்வாண சாமியார் - பண்டாரங்கள் வரை அனைவரும் சினிமா கழிசடைகளைப் போல ஓட்டு வேட்டைக்கு வருவார்கள். இதுவும் போதாது என்று, புத்தமதம் கூட இந்து மதத்தின் சகோதர அமைப்பு தான் என்று கூறிக்கொண்டு தலாய்லாமாவிடம் போய் ஆதரவு கேட்டுள்ளது ஆர்.எஸ்.எஸ்-ம் பாரதீய ஜனதா கட்சியும்.

இந்து வெறி தலைக்கேறி ஆர்.எஸ்.எஸ். கும்பல் இன்னும் பல கோமாளித்தனங்களைச் செய்கிறது. இந்து வெறியூட்டப்பட்ட இளைஞர்கள் வட மாநிலங்களில் இடுப்பில் சிறிய திரிசூலத்தைக் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டு திரிகின்றனர். இன்னும் சிலர் மணிக்கட்டில் திரிசூல காப்பு, கழுத்தில் திரிசூல டாலருடன் மைனர் செயினுடன் அலைகின்றனர். அவுரங்காபாத், அகமத் நகர் போன்ற ஊர்களின் பெயர்கள் முஸ்லீம் பெயரில் இருப்பதால் இந்துக்கள் அப்பெயரைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அவுரங்காபாத்தை 'காட்கி' என்றும், அகமத்நகரை வெறும் நகர் என்றும், கடிதங்களில் குறிப்பிடுமாறும் ஆர்.எஸ்.எஸ். வேண்டுகோள் விடுத்துள்ளது. தபால் தலை



காவிக் கொடியுடன் திரிசூலம் ஏந்தி இந்து வெறியூட்டப்பட்ட இளைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்



படிப்பகம்


www.padippakam.com

பற்ற சுயமாக அச்சிடப்பட்ட ஆர்.எஸ்.எஸ்-ன் உள்நாட்டுக் கடிதங்கள், கடித உறைகளையே பயன்படுத்துமாறும் கோருகிறது. இக்கடிதங்களில் காவிக் கொடியின் கீழ் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், இலங்கை, வங்கதேசம் ஆகிய நாடுகள் (அகண்ட பாரதம்) இருப்பதாக ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

### 'அரிசன'ங்களின் நண்பனாக அவதாரம்

இந்த சில்லறைத்தனங்களால் மக்களைக் கவர முடியாது என்று அறிந்து 'தாழ்த்த'ப்பட்டோரின் நண்பனாக புதிய வேஷம் கட்டி ஆடத் தொடங்கியுள்ளது ஆர்.எஸ்.எஸ். வடக்கே கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி 'தாழ்த்த'ப்பட்டோரைப் பெருமளவில் திரட்டி தனிப்பெரும் கட்சியாக வளர்ந்திருப்பதாலும், சாதிய அடக்குமுறையால் வெறுப்புற்ற 'தாழ்த்த'ப்பட்டோர் மதம் மாறுவதாலும் பீதியடைந்த ஆர்.எஸ்.எஸ். கும்பல் 'தாழ்த்த'ப்பட்டோரின் நண்பனாக ஒப்பனை செய்துகொண்டு சேரிப் பகுதிகளை நோக்கி படையெடுக்கிறது. கேரளத்தில் ஒரு கிராமப்புற கோயிலில் 'தாழ்த்த'ப்பட்டோரை அனுமதிக்க மறுக்கும் பார்ப்பனர்களுக்கு எதிராக கள்ளிக் கோட்டை நீதி மன்றத்தில் ஆர்.எஸ்.எஸ். வழக்கு தொடுத்தது. அதில் சாதகமான தீர்ப்பு கிடைத்துள்ளதைக் காட்டி 'தாழ்த்த'ப்பட்டோரின் உற்ற தோழனாக தன்னை சுயவிளம்பரப் படுத்திக் கொண்டு அவர்களை வளைத்துப் போட முயற்சிக்கிறது.

நாத்துவாரா கோயிலுக்குள் நுழைய 'அரிஜன'ங்களோடு பாதயாத்திரை போன சுவாமி அக்னி வேஷை வழிமறுத்துத் தாக்கிய ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் இன்று 'தாழ்த்த'ப்பட்டோரின் நண்பனாக அவதாரம் எடுக்கிறார்கள் என்றால் அதை நம்பி மோசம் போவதற்கு மக்கள் ஏமாளிகளல்ல ஆனால் அரசும், ஓட்டுக்கட்சிகளும் தொடர்ந்து வஞ்சிக்கும் போது எண்ணெய்ச் சட்டியிலிருந்து தப்பி எரியும் இந்துமத வெறி அடுப்புக்கு அவர்கள் அறியாமல் பாய்கிறார்கள். இதை மூலதனமாக்கிக் கொண்டு இந்துவெறியை விசிறிவிட்டு குறுகிய காலத்திலேயே அசுர வளர்ச்சி பெற்றுள்ளது ஆர்.எஸ்.எஸ். வகுப்புவாதத்துக்கு எதிராக விழிப்புடன் செயல்படுவதாகக் கூறும் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் கேரளத்திலும், பார்ப்பனர்களுக்கு எதிராக 'சூத்திரர்' ஆட்சி நடத்துவதாகக் கூறும் தி.மு.க. ஆளும் தமிழகத்திலும் ஆர்.எஸ்.எஸ். வேகமாக வளர்ந்துள்ளது என்றால் மற்ற மாநிலங்களைப் பற்றி சொல்லவேண்டியதில்லை. தமிழகத்திலுள்ள 12,000 கிராமங்களில், 3024 கிராமங்களில் ''சாகா''க்களைத் துவக்குமளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளதாக ஆர்.எஸ்.எஸ்-ன் அறிக்கையே கூறுகிறது.



ஒரே மேடையில் ஆர்.எஸ்.எஸ் - பாரதீய ஜனதா தலைவர்கள்; இந்து வெறியைக் கக்கும் இருதலைப் பாம்புகள்.

### இந்து ஓட்டு வங்கியைக் கைப்பற்ற போட்டா போட்டி

ஓட்டுப் பொறுக்கிகளைப் பொறுத்தவரை வகுப்புவாதம் தான் அவர்களுக்குக் கிடைத்துள்ள அரிய துருப்புச்சீட்டு. வகுப்புவாதத் துருப்புச் சீட்டை எப்படிக் கையாளுவது என்பதில் தான் அவர்கள் வேறுபடுகின்றனர். பாரதீய ஜனதாவை வகுப்புவாத சக்தியாக சாடினாலும் காங்கிரசை வீழ்த்த அதனுடன் கூட்டு சேருவதா வேண்டாமா என்ற பிரச்சினையில் 'மார்க்சிஸ்ட் கட்சியின் நம்பூதிரிபாடு கோஷ்டியும் மே.வங்க ஜோதிபாசு கோஷ்டியும் இரு துருவங்களாக நிற்கின்றன. அண்மையில் பாரதீய ஜனதாவின் உப தலைவர் விஜயராஜி சிந்தியா அளித்த விருந்தில் கலந்துகொண்ட வி.பி.சிங் நீண்ட ஆலோசனைக்குப் பிறகு பொது எதிரியான காங்கிரசை வீழ்த்த பாரதீய ஜனதா வேட்பாளர்களை ஆதரிப்பது என்ற முடிவை அறிவித்துவிட்டார். வகுப்புவாதத்தை எதிர்ப்பதாக கூப்பாடு போடும் ஆளும் காங்கிரசுக் கட்சி ஆர்.எஸ்.எஸ்-ன் இந்து வெறியூட்டலைக் கண்டும் காணாமல் மறைமுகமாக ஆதரிக்கிறது. வகுப்புக் கலவரங்கள் மூண்டால் அதைத் தமது தேர்தல் அறுவடைக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று கணக்கு போடுகிறது.

தன்னை இந்துக்களின் நண்பனாகக் காட்டிக் கொள்வதற்காகவே தொலைக்காட்சியில் இராமாயணம், மகாபாரத தொடர் நிகழ்ச்சியை ஒளிபரப்பியது, பாரத் மாதா, பாரத் கி புகார் ஆகிய நிகழ்ச்சிகள், முஸ்லீம்களை எதிர்த்த சிவாஜி, ராணா பிரதாப்சிங் ஆகியோரது வரலாற்றுச் சித்திரங்களைக் காட்டுவது என்று அரசு செலவிலேயே ஆதாயம் தேடிக் கொண்டுள்ளது ஆளும் பாசிச கும்பல். மறுபுறம் ராமஜென்ம பூமி இந்துக்களுக்கே தரப்படவேண்டும் என்று பிரச்சாரம் செய்யும் துவாரகை சங்கராச்சாரிக்கு காங்கிரசு கட்சியினர் பல்லக்கு தூக்குகின்றனர்.

ஆக, வரப்போகும் தேர்தலில் இந்து ஓட்டு வங்கியைக் கைப்பற்றும் போட்டா போட்டியில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் முழு மூச்சில் இறங்கிவிட்டன. மக்களை அழுத்தும் வறுமையும் வேலையின்மையும் விலையேற்றமும் கூட முக்கியமில்லை. நீ இந்துவா, முஸ்லிமா என்பதுதான் முக்கியம் என்று மத வெறியர்கள் உசுப்பி விடுகிறார்கள். மக்களின் மனத்திலே அச்சத்தையும் வெறுப்பையும் விதைக்கிறார்கள். கைகளில் கொலைவாளையும் தீவட்டியையும் திணிக்கிறார்கள். மீண்டும் ஒரு சிலுவைப் போர் இந்தியாவைக் கவ்வுமுன்னே உழைக்கும் மக்களும் புரட்சியாளர்களும் விழிப்புடனிருந்து முறியடிக்க வேண்டிய அவசர அவசியத்தையே பெருகிவரும் மதவெறி பேரபாயம் வலியுறுத்துகிறது.

○ மனோகரன்

### இந்துவெறியர்கள் அணி சேர்ப்பு! கலவரங்கள் கட்டவிழ்ப்பு!

ஆர்.எஸ்.எஸ்-இன் அபாயகரமான வளர்ச்சியும் அதனுடன் பாரதீய ஜனதா மற்றும் சிவசேனாவின் கூட்டும் மீண்டும் மதவெறிக் கலவரங்களைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. இந்து வெறியர்கள் தமது பலத்தைக் காட்டி கலவரங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கு, பஞ்சாபில் மோகா நகரில் கடந்த ஜூன் 25 அன்று ஆர்.எஸ்.எஸ் ஊழியர்களை சீக்கியத் தீவிரவாதிகள் படுகொலை செய்த நிகழ்ச்சி பெரும்வாய்ப்பாக அமைந்தது. இப்படுகொலையைக் கண்டித்து ஜூலை 3ந்தேதியன்று மாகாராஷ்டிராவில் கடையடைப்பு - பேரணிக்கு ஆர்.எஸ்.எஸ்-பாரதீய ஜனதா - சிவசேனா ஆகிய மூன்றும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன. இந்த கடையடைப்பு போராட்டம் அனாவசியமானது என்று கள்ளக்கடத்தல் மன்னன் மஸ்தானின் தலைமையிலான தலித் முஸ்லிம் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் ஆத்திரமடைந்த இந்து வெறியர்கள் புல்தானா மாவட்டத்தில் சிக்லி நகரத்திலுள்ள மசூதி அருகே ஊர்வலமாகச் சென்றபோது முஸ்லீம்களையும் கடைகளையம் தாக்கி தீ வைத்தனர். முஸ்லிம் குடியிருப்புகள் மீது கல்லெறிந்து வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். தற்காப்புக்காக முஸ்லிம்கள் எதிர்தாக்குதல் தொடுக்க கலவரம் மூண்டது. கடைசியில், போலீசின் துப்பாக்கி சூட்டுக்கு மூவரைப் பலிகொண்டு, பலரைப் படுகாயப்படுத்திய பிறகு கலவரம் ஓய்ந்தது. சீக்கிய பயங்கரவாதத்தைக் கண்டிப்பது என்ற பெயரில் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களைக் கட்டவிழ்த்து விடுவதுதான் இந்து வெறியர்களின் நோக்கம் என்பதை இந்த கடையடைப்பு தெளிவாகவே நிரூபித்துக் காட்டியுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர்: எம்.கே.சாமி, பிரேம் பிரஸ், 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094.

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ இது தரகு முதலாளி பிர்லாவின் சீமந்த புத்திரன் குமாரமங்கலம், மிகப்பெரும் ஜவுளி முதலாளி எஸ். குமாரின் திருநிறைச் செல்வி நீரஜா ஆகியோரின் திருமண வைபவம். ஆடம்பரம் என்றால் நமக்கு அதிகப்பட்சம் தெரிந்திருக்கும் விபரம் ஐந்து நட்சத்திர ஓட்டல், பல ஆயிரம் ரூபாய் விருந்து! அம்முதலாளிகளின் செல்ல நாய்க் குட்டிக்கு பிறந்த நாள் விழாவுக்கே இந்த செலவு அவர்களுக்குக் காணாது! ''சொர்க்க''த்தில் நிச்சயிக்கப்படும் திருமணத்தை அதற்குரிய கௌரவத்தோடு நடத்த அவர்கள் செய்த செலவு ரூபாய் 50 கோடி.

மே 17ந் தேதி நடந்த இந்த திருமணத்தால் பம்பாய் நகரமே மூச்சுத் திணறியது! 2 மடங்கு வாடகை கொடுக்க தயாராய் இருந்தாலும் சாமான்யனுக்கு 'டாக்ஸி' கிடைக்கவில்லை. 'பஸ்'ஸில் கூட்டம் அலைமோதியது. பழைய தள்ளுமாடல் வண்டிகளைத் தவிர பிற அனைத்து வாகனங்களும் பிர்லா குடும்பத்தின் திருமண தேவைக்காக பல வாரங்களுக்கு முன் பதிவு செய்யப்பட்டது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அன்றைய தினம் பம்பாய் நகருக்கு சிறப்பு விமானம் விடப்பட்டது. லீலா பெண்டா, ஓப்ராய், தாஜ், - இன்னும் இம்மாதிரியான பல ஐந்து நட்சத்திர ஓட்டல்கள், திருமண விருந்தினர்கள் உடை மாற்றும் தேவைக்காக பல வாரங்களுக்கு முன்பே காத்திருந்தன. பம்பாய் நகரம் அன்றைக்குக் கண்ட பரபரப்பு இன்னும் அந்நகரவாசிகளின் நெஞ்சங்களை விட்டு அகலவில்லை.

இதோ இவர்கள், திருமணச் சந்தையில் விற்பதற்காக பெற்றோர்களால் கொண்டு வரப்பட்ட இளம் பெண்கள். ஆண்கள் கூட்டம் தங்களை விலை பேசுவதற்கு ஏதுவாக அலங்கரித்துக் கொண்டு நம்பிக்கையோடு காத்திருக்கும் உடைந்து போன இளம் உள்ளங்கள். சென்ற ஏப்ரல் மாதம் அகில் பாரதிய அகர்வால் சமிலான் அமைப்பு டில்லியில் நடத்திய திருமண ஏற்பாடு இது!

பார்வையாளர்கள் பகுதியிலிருந்து கேலியும் கிண்டலும் கூச்சலும் தாறுமாறாய் வழிந்தது. தரையைப் பார்த்து நின்று கொண்டிருந்த அந்த இளம் பெண் கூசிப் போனார். உடல் நடுங்கியது. ''பெயர்'', ''அனிதா'' தொண்டையிலிருந்து குரல் சிதறி வந்தது. ''உரக்க சொல்'' என்று கூட்டம் கத்தியது. நடுங்கும் குரலை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மீண்டும் சொன்னார். சாதி, வயதுக்கு பிறகு உயரத்தை கேட்டார்கள், ''5 அடி 2 அங்குலம்''; ''படிப்பு'' ''எம்.ஏ''. அடுத்த ''நெம்பர்'' அழைக்கப்பட்டது. அறிமுகத்தை முடித்துக் கொண்ட அனிதா தளர்ந்த நடையில் இறங்கிப் போனார். அவரைப் பிடித்திருந்தால், பார்வையாளர் பகுதியிலிருந்து பல கும்பல் அவர் பெற்றோரை தேடி வந்து நக்கல் கேள்விகள் கேட்கும். எதுவும் இல்லையென்றால், அவர்கள் வந்த மாதிரி திரும்பிப் போக வேண்டியது தான்! பல நூற்றுக்கணக்கான பெண்கள் இவ்வாறு பகிரங்கமாக அவமானப்பட்டு திருப்பியனுப்படுகிறார்கள். இருந்தாலும் அவர்கள் நம்பிக்கை இழக்காமல் பல மேடைகள் ஏறுகிறார்கள்! அவமானமாக இருந்தாலும் எப்படியாவது ஒரு வாழ்க்கைத் துணை கிடைக்காதா என்ற ஏக்கம்! பல மாநிலங்களில் மந்திரிமார்களே இவ் ''விழா''க்களைத் திறந்து வைக்கிறார்கள்.

திருமண வைபவத்தை, தாலி கட்டும் ''புனிதத்''தை வைத்து கள்ளப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றும் தரகு முதலாளித்துவக் கும்பல் ஒருபுறம்! தாலி கட்டும் புனிதத்தைச் சுருக்கு கயிறாக மாட்டிக் கொண்டு தங்கள் மானத்தை, வாழ்க்கையை இழக்கும் சகோதரிகள் மறுபுறம். வாழ்க்கைத் துணைவன் என்ற முறையில் இல்லாமல் பெண்களை மேய்ப்பவன் ஆண் மகன் என்ற ஆண் ஆதிக்க கருத்துக்கு வெற்றிச் சின்னமாக இருக்கும் தாலியை நாம் வீசியெறிவது எப்போது? தட்சணைக் கொடுத்தல்ல, நட்பு முறையில் இயல்பாக நாம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க துணிவது எப்போது?





படிப்பகம்